1078

786

மனதில் இருளையகற்றி அருளைத்தரும்

# மகுஷூக்குமாலை.

பிஸ்மிப்பாட்டு, கப்பற்சிந்து, தங்கப்பாட்டு,
கும்மிகள், ஆனந்தக்களிப்புகள்,
கண்ணிகள், சிந்துகள், கீர்த்தனைகள், தாலாட்டு,
இன்னிசைகள் முதலிய
ஞானத் திரவியங்கள்

இவை
தற்காலம் மட்டுக்களப்பு காத்தாங்குடி [illegible]
மலையாளம் ஸ்ரீமான்
செய்குனா செ. மு. செய்யிது முகம்மது மவுலானா
அவர்களால் இயற்றப்பட்டு

மட்டுக்களப்பு, காத்தான்குடி,
அ. அலித்தம்பி லெப்பை அவர்களின் புதல்வராகிய
**அ.லி. இஸ்மாயில் லெப்பை**
அவர்களால்

மதுரை மீனாக்ஷி விலாஸ் பிரஸில்
பதிப்பிக்கப் பெற்றது.

[...டது] 1935. [விலை சதம் 50

ௐ7:414
NBS
172192

இலாஹி

தற்காலம் மட்டுக்களப்பு காத்தாங்குடி வாசமான

மலையாளம் ஸ்ரீமான்

# செய்குனா செ. மூ. செய்யிதுமுகம்மது மவுலானா

அவர்களால் இயற்றப்பட்ட

# மகுஷூக்குமாலை, பிஸ்மிப்பாட்டு, கப்பற்சிந்து, தங்கப்பாட்டு, கும்மிகள், ஆனந்தக்களிப்புகள், கண்ணிகள், சிந்துகள், கீர்த்தனைகள் தாலாட்டு, இன்னிசைகள் முதலிய ஞானத் திரவியங்கள்.

---

இவை

மட்டுக்களப்பு, காத்தான்குடி, கனம்

ஹாஜி. மு. கா. முகம்மதிஸ்மாயீல் ஆலீம்ஹாபிளு

அவர்களாலும்

ஷையூர் மீ. முகம்மதிபுறுகீம் ஆலீம் சாகிபு

அவர்களாலும் மற்றும் உலமாக்களாலும்

பார்வையிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன

---

மதுரை மீனாக்ஷி விலாஸ் பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது.

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது] 1935

இலாஹி

# இப்புத்தகத்தில் அடங்கியவை.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | மகுஷ-மிக்குமாலை | 5 |
| 2. | முஹிய்யதீன் ஆண்டவர்பேரில் முனுஜாத்து | 15 |
| 3. | பிஸ்மிப்பாட்டு | 19 |
| 4. | கப்பற்சிந்து | 24 |
| 5. | ஞான ஆனந்தக்களிப்பு | 28 |
| 6. | தங்கப்பாட்டு | 30 |
| 7. | ஞானச்சந்தக்கும்மி | 33 |
| 8. | ஞானக்கும்மி | 35 |
| 9. | ஆனந்தக்களிப்பு | 37 |
| 10. | சிந்து கண்ணிகள் | 40 |
| 11. | அபுரூபச்சிந்து | 42 |
| 12. | முஹிய்யதீன் ஆண்டகைபேரில் இன்னிசை | 43 |
| 13. | இன்னிசை தாலாட்டு | 44 |
| 14. | பதம் கேதாரகௌளம் | 46 |
| 15. | ஞானச்சிந்து | 48 |
| 16. | பதம் சஹானு | 50 |


1998
784:0954

# சாற்றுகவிகள்.

மட்டுக்களப்பு காத்தான்குடி றஃமானிய்யா வர்த்தகசங்க
அங்கத்தவரிலொருவரும் பிரபல வர்த்தகருமாகிய
கனம் அ. இஸ்மாயீல் லெப்பை, அவர்களாற் சொல்லிய

இரட்டையாசிரிய விருத்தம்.

திருமறைப் பொருளான றஃமானை யனுதினஞ்
சிந்தைமீ தன்புகூர்ந்து
தேனமிர்த மானகவி மாவதிலு றைந்தசில
திரவியப் புதைய லதனைக்
கருவிலுரு வாயமைந் தருளாதி யாகவரும்
ஹபீபுநபி தம் பொருட்டாற்
கவிவாணர் மெய்க்கவே புவியோ ருகக்கவே
காதினிய சொல்லமிர்தமாய்
மருவளரு மட்டுநகர் பதிவாழும் செய்யிது
முகம்மத ரியற்று மிந்த
மானிலத்தோர்களின் மனக்கசடறுத்திடும்
மகுருக்குமா லையதனை
அருணோ தயம்போ விலங்குமின் னூலினை
யாராய்ந்தறிந் துணர்ந்து
ஆதியிறையோ னையணு வாகிலுமறக்கா
தமைந்திடிற் பலனதாமே

---

அக்கரைப்பற்றைச்சேர்ந்த அட்டாளச்சேனை மகா-௱-௱-ஸ்ரீ கனம்
மு.மு. அப்துற்றகுமா லெவ்வை ஆலீம் புலவரவர்களியற்றிய
இரட்டையாசிரிய விருத்தம்

தேடுவோர்க்கினிதான திரவியம்போலு மெழில்
சேருமொரு துறவி பூண்ட
செப்பரிய ஞானிகளி னிமையோடு லாவிடுந்
திருமலர் வனம் போலவும்
நாடுவோர்க்கினிதான தேனோடு பால்பழம்
நல்குமோ ரமுது போலும்
நாட்டநடுவுற்றதீ னுனது பொதிந்திட்ட
நற்சரிகை கிரிகையோகம்
தேடுமொரு ஞானமும் வழுவா தமைந்தவொரு
சித்திரப்புஞ்ச மெனவும்
சிந்தித்த பேரெலாம் தன்னினைவிலுற்றபடி
தேடுநற் களஞ்சியமுமாய்
பாடுவோர்க்கினிமையொடு செய்யிதுமுகம்மது
பகருமகுருக்குமாலை
பற்பலரு மொப்பவழிகாட்டுமெதின் மகிமையைப்
பார்தனிலறிந்திடுகவே

மட்டுக்களப்பு டிஸ்திறிக்டு நாடுகோடுப் பகுதியைச்சார்ந்த வரிப்பத்தன் சேனையிலிருக்கும் மகா-ா-ா-ஸ்ரீ முகையதீன் லெவ்வைப்போடி வ. வி. சின்ன அகமதுலெவ்வைப்போடி காளியார் தமது உஸ்தாது செய்யிதுமுகம்மது மவுலானு அவர்கள்பேரில் சொல்லியது

விருத்தம்

பூவேஅலர்ந்த பொன்மலரே பிறையே அழகே பூரணமே
காவேசெறிந்த கனிபழமே கண்ணின்மணியே கருவுருவே
நாவே யின்ப நாகரிக நளினக்குயிலே ஒளிமானே
ஹுவாய்ச்சமைந்த மரகதமே உஸ்தாதிடத்தில் போய்வாரும்

இராகம். நாதநாமக்கிரியை. தாளம் . ஆதி.

பல்லவி

முன்னேசலாம் சொல்லிவாடி. என் அன்னமே
முறுஷிதைக் கண்டுதேடி

அநுபல்லவி

முன்னேசலாம் சொல்லிவாடி முறுஷிதைக் கண்டுதேடி
வன்னமறை வேதரடி வாக்கியம் பெறலாங்கோடி (முன்)

சரணங்கள்

(1) வாசநறைவீசு மலராம் மிகுந்தமலே
யாளமவரூர் பிறந்தவர்
தேசமெங் கும் தீனறிவித்துத் திருத்தவந்த
செய்யிது முகம்மதென்பவர்

பாசபலஞானவழி நால்விதமுமேயறிந்த
நேசநேசரானவெங்கள் வாசகருக்கெந்தன் சலாம் (முன்)

(2) ஆரணத்தொழுகைவிடுகார் அறிவிலாய்ந்த
அட்சரத்திலாகியிருப்பார்
பூரணப்பொழுதுநிலவும் அவர் சரத்தில்
பொங்குவதுமங்கே விடுகார்

காரணக்கடவுள்தந்த கருத்தைத்திருத்தும் செய்கு
வாரணமொழிகளோதும் வள்ளலுக்கெமதுசலாம் (முன்)

(3) மலக்கல் மவுத்துவாறதும் நமதுயிரை
வாங்கியே அவரெடுப்பதும்
கலக்கப்படுத்தும்கன்னுசி மூலமணியைக்
களவாய் எடுப்பே னென்பதும்

பிலக்கத்தொனிபகரும் பேச்சுமூச்சின் வழியும்
துலக்கமுடனே கேளுசொல்வாரென்சலாமும் சொல்லு(முன்)

(4) ஹக்கனருளொக்கச் சுமந்தோர் அறபிலுள்ள
ஆலகபிமார்க்க முணர்ந்தோர்
பக்குவமதான வாசியைப் பழக்கஞ் செய்து
ஹக்கனே யறிந்த காமிலாம்
துக்க விருளைத்து லைக்க மிக்க கலிமர்ப்பொருளைச்
சக்கறப்பகரும்செய்யி துக்கெதிசா யெந்தன் சலாம் (முன்)

(5) மன்னன் நமைவகுத்ததும் மாறுதெழுந்த
வாசிஉருவாக விண்டதும்
சொன்னன் சுஜூதுசெய்யவும் துலங்கிநின்ற
சூட்சமது மூச்சியானதும்
இன்னவிதங்களெனச் சொல்வாரெனக்குரைநீ
முன்னேசலாமுரைத்தான் சின்ன அகுமதென்றே (முன்)

---

அக்கரைப்பற்று கனம் அலியார் லெப்பை ஹக்கீம் அவர்களின்
புதல்வராகிய முகம்மதப்துல் காதிறு என்பவராற் சொல்லிய
சாற்றுக்கவி.

நேரசைக்கட்டளைக் கலித்துறை.

மாவாழு, வாச, மவுனனந்தத்திரு, மாட்சிமிகும்
மாவாம, னுதி, மதவாவி, யாமகு, மூதுகலி
மாவாயி, ருந்து, மனுவாய்ச்ச, மைந்திடு, மாண்புணர்த்தி
மாமாயை, நீக்கு, மகுகுக்கெனும்மணி, மாலையிதே.

வெண்பா.

மாலைபல வாயிம் மகிதலத்தி லுண்டெனினும்
மாலையிதே மாதவத்தோர் மார்பேறும்—மாலைதனைக்
கோர்த்தார் குறையற யான் கூறருமென் நெஞ்சமிகை
தீர்த்தார்ஸெய் யித்முஹம தே.

---

திரிகோணமலை 7ம் நெம்பர் தெருவிலிருக்கும் 4ம் நிம்பர் பள்ளி கதீபு
மகா-ள-ள-ஸ்ரீ உ. லெ. ஆ. சீனிமுஹம்மது லெவ்வை
அவர்கள் சொல்லிய சாற்றுக்கவி

கலித்துறை

சீரிற்சிறந்த புகழுடையோன்மலை யாளத்திற்சேர்
ஊரிற்சிறந்தவன் மட்டுக்களப்பி லுகந்திருப்போன்
பேரிற்சிறந்திடு செய்யிதுமுஹம்மதுப் பேர்தரித்து
தாரிற்சிறந்தமௌ லானுவெனும்பெய ராதவனே.

தக்கவறபுந் தமிழுநூ லுங்கற்றுத் தரையிலுளோர்
மிக்கபுலவரென் றேற்கும்படிக்கும் விதந்துவிதந்
தொக்கநல்ஞான விளக்கமதாயுளத் தன்புதா
விக்கமதூர மதுஷூ ங்குமாலை யிபற்றினனே

மால்நிழலாதவ மாகபிநாதர் மரபுடையோன்
மால்நிழலாற்சித்தி மகுஷ-முக்குமாலே மௌனமொழி
மால்நிழலாக்க மகற்றிடுமோர்மை வருத்திவைக்கும்
மால்நிழலா தவ ம.கு.அ.து. சிதகுவெளி யெய்துமே

---

இவ்வாக்கியோன் தமது உஸ்தாதுபேரில் சொல்லிய பதம்

இராகம்—சகாணு—தாளம்-ஆதி.

பல்லவி.

எங்கும் பொங்கும்பிரகா சங்குரு நாயகநாதரே
ஹாமீம்ஐன்ஸீன் காபெனும்பொருளைக்கல்பில்நிறுத்திடும் கண்மணியே

அநுபல்லவி.

அற்புத முப்பொருளுட்கமலக்கரு வாகியஞானச்சுடரொளியே
பொற்பதிமூலத் துற்பனவாழ்வே பொன்மலராகியநற்குணரே (எங்கு)

சரணங்கள்.

1 காரணத்தபுத்தர் கானகந்தன்னில்காட்டிடுங்கலிமாவுட்பொருளைச்
சூரிய சந்திர சூஸ்திரமாகிய சுழிமுனைசூட்சத் பொருளதனைக்
காரணமாகிய கலிமாச் சிற்றைக் காதினிலோதுங் காமிலதாம்
ஆரணமாகும் தீன்தீன்முஹியி தீன்வழியாகிய நாயகமே. (எங்கு)

2 ஆஷிக்கதாகிய ஆரிபுபில்லா மஸ்தான் ஒலியாசெய்குஅலி
மாசையகற்றி வாசியைத் தந்தெனக் காசையைப்பூட்டிடுமெகுருக்கே
வாசியினேசை இருபுருவத்திடை வாசமதாகமுழங்குதுபார்
தேசமதின்திஸ்தானியில்வாழும் தேசிகராகியவாசகரே (எங்கு)

3 முத்துமுகப்பினில் முச்சுடர்வீதியில் முப்புரியாகியமுப்பொருளைக்
குத்துவிளக்கது மத்தியிலேற்றி நித்திரைசெய்பவர்புத்தியின்மேல்
சுத்தவலம்புரி சத்தமும்ராகம் சுற்றிவருமது சித்தமதில்
சத்துருஇபுலீ சத்தியம்செய்து சற்றினிலோட்டிடும் சற்குருவே (எங்கு)

4 ஆஷிக்கு ஆபிது ஆரிபுஹாஜி ஆதரவாகியஹாதியரே
காஷிபு காமில் முகம்மிலதாகிய காரணப்பொருளே கண்மணியே
வாசமதாகிய வாசியதென்னில் வசப்படத்தந்து யீந்தவரே
ஷெனதாகிய செய்யிதுமுகம்மது சிந்தைமகிழவே தந்தருள்வீர் (எங்கு)

முற்றிற்று.

---

பிஸ்மில்லா ஹிற்றகுமா னிற்றஹீம்.

# மருஷ ெக்குமாலை.

காப்பு—விருத்தம்.

ஆதிமுத லாகிநின் றஹதியத் தரும்பொருளைக்
காதினிற் சிற்றுய்க்கூறுங் காட்சியாங் கலிமாவுருவை
யாதினில் நிலைநிறுத்தி யாபேரு நயமாய்வாழ்க
நீதியா யிந்நூலைத்தான் நிகழ்த்த நீகாப்புத்தானே.

ஆசிரிய விருத்தம்.

மகளியத் தருளைப்போற்றி மறைந்த கன்சொளியைப் போற்றி
அகந்தனில் ஹ-வைப்போற்றி அலிபுலா மீமைப் போற்றி
ஜெகந்தனில் தீனைப்போற்றி ஜாமிஇ னிசுமைப்போற்றிப்
பகர்ந்திடும் மருஞக் கென்னும் பாடலைக் கூறுவாமே.

## தொங்கல்.

ஆதியஹதாகி யரூபமாகி யாருமறியாமல் மறைந்ததாகி
சோதிவஹதாகிச் சூட்சமாகிச் சொல்லத் தொலையாத சிற்றதாகி
நீதிவாஹிதுல் வுஜூத்தாகி நிறைந்த ஹகீகத்து நிரப்பமாகி
யோதியது ஆலமறுவாஹாகி ஒழுங்கு பலபல கோலமாச்சே. 1

கோல மாலமுல் மிதாலுமாகிக் கொண்டகோலங்கள் பலதுமாகி
யால மஜ்சாமில் கண்டிப்பாகி யைந்துபூதமு மொண்டிப்பாகி
யால மின்சானில் நிரப்பமாகி யந்த இன்சான்தான் வெளியில்வரக்
கோலமதுதாத்துல் முகம்மதிய்யா குதறத்து றப்பு லறுபாபாமே. 2

தாத்தின்கருணையு பீடேற்றமுந் தாத்து முகம்மதின் மீதிலாகு
மேற்றமாலும் பின்சகுபுமீது மெல்லா ஹர்லிலு முண்டாகவும்
சாற்று மருத்தாபு அவ்தாத்திலும் சங்கையாகிய அருயாறிலு
மூற்ற றகுமத்து அடைமழைபோல் ஊழிகாலமுஞ்சொரிவாயாக. 3

எங்கணபியுல்லா மிருஜுஜெனு மேணிப்படியிலே யேறும்போது
தங்கப்பாதத்தைத் தாங்கிக்கொண்டு தருத்து அறுசினிமேலேற்றிவைத்த
திங்கள்முகிய்யித்தீன்பொற்பாதத்தைத்தின்மைப்பாவியென்சிரமேல்வைத்தி
பொங்கு மருஞக்குமாலைதனைப் புகலக் கேளுங்க ளிருவான்களே [ப்

மொத்தமாகிய குறுஆனெனு மவுஜூதவனதுகலாமி னின்றும்
மெத்தப்பெரிதான ஹதீதில்நின்று மேன்மை யிமாம்களின் சொல்லில்நின்று
முத்துமணிவெள்ளை பச்சைநீல முப்பொருளையுமொன்ருய்ச்சேர்த்து
முத்துவைரம் வைடூரியம்போல் முழுதுமொளிவாகத்துலங்குதுபார்.

துலங்குமகுஷருக்குமாலைதனைத் துலையாவாசமாய்க்கோர்வைசெய்தோன்
*விலங்கும்பாவத்தைச் சுமந்தபாவி விள்ளும் செய்யிது முகம்மதென்போன்
கலங்கும் கியாமத்துநாளையிலே கத்தோன் றஹ்மத்தை ஹாஜத்தானேன்
முழங்கு முகம்மது மஃரிபத்தில் முத்தியருள்பெறத் துணைசெய்வாயே. 6

அல்லாஹூ வவன் தீதாறையும் ஆலநபியுல்லா சபாஅத்தையும்
எல்லாஹாவிலுமாசையாக வெண்ணிக் கோர்வையாய்தொடுத்தேனிதை
நல்லாயிதன்பிழை திருத்தும்பேரில் நாயன்றஹ்மத்து மேலுமுண்டு
பொல்லாக் கோபமும் பாவத்தையும் பொறுத்து ஈமான்தந்தருள்வாயாதி 7

இதையான் ஹிஜ்றத்து ஆயிரத்தோடின்னும் மூந்நூற்றி நாற்பத்தொன்றில்
உதையமாகவே கூறச்செய்தேன் உரியநாயன்றன் னருளினாலே
புதையலாமிது புறுகான் தன்னில் புந்தியுள்ளோர்களறிந்துகொள்வார்
விதையைப் பயிர்செய்யும் பரிசுபோலே விண்டேன் ஒளியாமலுலகத்தோரே

ஆதிமலக்கோடு அருளுண்டாகி யாதம் ரூபத்தை யமைக்கவேண்டி
நீதிமலக்குகள் ரூபஞ்செய்து நிகழ்த்தச் சிரசன்றிச் சடலமாக
சோதி றஹ்மத்துக் கையைக்கொண்டு சொந்தமாகவே சிரசை வைத்தான்
வேதநாயகன் குதறத்தாலே வெளியா யுறுப்பெலாம் நிரப்பமாச்சே 9

ஏகனல்லாகுஸ் ஸமது நாயன் எல்லா கல்கையும் முன்னிறுத்தி [து
யாகமென்னிலோர் அமானமுண்டு யாரோசுமப்பதென் றுரைத்தபோ
மோகமில்லாம லெல்லாகல்கும் மோசம்வருநமக் கேலாதென்ன
ஏக ஞதத்தைக் கேட்டபோதுஎலுஞ் சுமப்பேனென்ருதஞ்சொன்னர்

எல்லா கல்குமே விலகிக்கொள்ள யெங்களபுஆதம் சுமந்தாரதை
அல்லா குறுஆனில் யிதுவிசளம் ஆதிதொடுத்துப் பின்னந்தம்வரைச்
சொல்லால்குறுஆனில்அல்லாசொன்னான்இன்னு அறளினல்லமானத்தென்று
நல்லாய்ப்பேணுதோர் அமானதத்தை நாளை நரகத்துக்கிரையாமென்ருன்.11

அந்த அமானத்தைப் பேணவேணு மந்த அமானத்தைப்பேணுதவர்
எந்த கிதாபையு மெடுத் தோதினு மெரியுநரகத்துக்கிரையாமென்றும்
தந்த அமானத மேதுவானல் தகுதியுடலுக்குள் றூகதாகு [ருர்.
மந்த றூஹைத்தான் பேணவேணு மதைத் தானறிவது கடனுமென்

* விலங்து—விலக்கு. வலித்தல் வெலித்தலாயது. செய்புள் விகாரம்.

ஆமை ஆயிரமுட்டைபோட்டு யாருமறியாமலிருக்குஞ் சும்மா
சாமத்திற்பேடோர் முட்டைபோட்டுச் சகலரறியவே கொக்கரிக்கும்
ஊமை போலவே யிருக்கவேணு மோர்மைத் தௌஹீதை யறியவேணும்
ஹாமீம் நபியுல்லா சொன்னபடி யனேகங் கிதாபினி லெடுத்தோதினர் 13

ஆதம் சடத்தினி லமானமாக வாதிறூகைத்தானாதநாடி
சோதியாதத்தின் தொப்புளாலே சூட்சமாகவே யூதநாயன்
பூதமனமில்லா வருத்தமாகப்புகுந்து ஆதத்தினுடலுக்குள்ளே [ய்
நீதமிறைவன்தான் றூகைப் பார்த்து நீதானிது போலே புறப்படுவா

உரியநாயன்தான் றூகையூத உந்திவனத்தினிலோடித்தட்டி
சுருதியவடத்தி லடையாளமாய்ச் சூட்சமாதத்தின் தலமுமாகி
யிருளிலகப்பட்டு வெளியில்லாம விருதயத்தினி லோடித்தட்டி
மருவியவிடத்தில் அலாமத்தாகி மூலமுகம்மது மக்காமுமாச்சே 15

தரிக்கவவ்விட மிடமில்லாமற் றங்கியேறி முண்டகத்திலூன்றி
சிரசிலோடவே தும்மினர்கள் சிதறி யல்ஹம்தென் றுதமோதி
யிறைவ்னிறு ஹமக்கல்லாவென்று யிரங்கி யாதத்தில் கபூலுஞ்செய்து
பெரிய தலந்தனிற் றரிபடுத்திப் பெரிய மக்காமது அறுசுமாச்சே 16

இந்த விசளந்தான் முழுதுமாக விறையோன் குறுஆனிலருளிச் செய்தான்
சொர்தவற்றகுமான்முதற்றொடுத்துச்சொன்னன் அலல்அறுசிஸ்தவாவரையி
இந்தஆயத்தின் பொருளாவது இறையோன் சரியொத்தானறுசுதன்னில் [ல்
பந்தம்போலவே பிரகாசமாய்ப் பந்தச்சுடரொளிசுழித்துவீசி. 17

சுழித்தறூகுல்லா றூகுல்குதிசி சூழும் வலம்புரி நடனமாக
வொழித்து அடங்கலையாட்டிவித்து வோடும் நரம்புக்கு விசைகொடுத்து
அழுத்தமாகவே பார்வை கேள்வி பேச்சுமூச்செல்லாம் பெற்றுண்டாகிக்
கொழுத்த காட்டினிற் சிங்கம்போலே கோமான்கிலாபத்து றூகுல்குத்தூஸ்.

தன்னையறிவது பறுலாமென்றும் தலைவனறிவது சுன்னத்தென்றும்
என்னகாரியந்தானென்பது வேதுகாரிய மவனென்பது
முன்னே யவனெங்கே தானுமெங்கே முடிவில்தானெங்கே யவனுமெங்கே
என்னவிதத்தினிலிருந்தோமென்று எனக்குச்சொல்லுங்கள் பெரியோர்களே

மூலக்கலிமாத்தான்முளைத்ததெங்கே முளையா யெழும்பிய முளையுமெங்கே
பாலஞ் சிறுத்தெங்கே மீசானெங்கே பவுசாம் மகுஅதுசிதுகுமெங்கே
சூலைமுன்முன்னே பெற்றதுயார் சூலாய்ப் பிறந்தது எந்தவஸ்து
மூலபாதாளமூலியெங்கே முற்றாய்க்குருமாரேகுறிப்புச்சொல்லும் 20

கலிமாத்தலையேது நிலையுமேது கலத்தா லெழுதாத வலிப தேது
கலிமாப் பொருளேது வருளுமேது கல்புமஜாசிய்யி ஹகீக்கியேது
புலம்பிப்பேசாத மந்திரத்தில்பொருள் நிறைந்தூமை யெழுத்துமேது
குலத்தில் குருமாரே குறைவில்லாமல் கூறும் சுவாலுக்கு ஜவாபுதாரும் 21

மறுஜல் பகுறைனிவுடலிலெங்கே மறதியாகிய பறுசக்கெங்கே
மரணநேர மிரத்தமெங்கே மவுத்து ஹகீக்கிய்யு மிருதியேது
இரணத்தெளிவெங்கே யொளியுமெங்கே யிரவுபகலொடு முதிப்புமெங்கே
தரணிமாந்தரேசெய்குமாரே தாசன்மசலாவின்முடிவைச்சொல்லும் 22

பெரியோன் நமக்கீந்த சிபாத்து ஏழைப்பெற்ற தாயாரு தகப்பனுரு
அருமையாகிய நுக்தாவெங்கே ஹப்லுல்வரீதென்ற நாம்பதெங்கே
யுரியமக்காமது காபகபுசைன் உடலில் குறிப்பெங்கே தானமெங்கே
யறிவுக்கடலான குருமார்களே யறியும்படியாக ஜவாபுதாரும். 23

மாணிக்கம் முத்துப் பொன் பவழம் மகாமன் மஹ்மூதுதானமெங்கே
யாணிக்கலிமாத்தான் ரகசியத்தினடியுநுனி யெங்கே சூட்சமேது
காணிக் காசாசை ஹவாநப்சு கனமாய்த் திரையாகநின்றதெங்கே
பேணிக் காமிலாம் செய்குமாரே பேசிமறுமொழி ஜவாபுதாரும். 24

சாலிக்காகியபேர்கள் செய்யும் சாலிஹாகிய அமலுமேது
மாலிக்காகிய றஹ்மானவன் மனுவைக்கூப்பிட்ட நாமமேது
தாலிபாகிய பேர்கள் செய்யுந் தவத்தின்நிலையேது தானமேது
சாலிஹாகிய பீருமாரே சறகுதவறுமல் ஜவாபுசொல்லும். 25

றூஹீலெத்தனைவகை யுண்டுகாண் றூகுபிறந்தது மெந்தநேரம்
றூகுஅனுசிறிற் கலந்ததெப்போ றூகுவுடலிலே தரித்ததெங்கே
றூகும் அறுவாஹும் றூஹானிய்யும் றூகுல் குதுசியின் தலமுமேது
றூஹின் காரண மறிந்தோர்களே றூஹின் விபரத்தைப் பிரித்துச்சொல்லும்.

அஹதிய்யா முதல் வாஹிதிய்யா வரூபரூபமா யிருந்ததேது
அஹது அஹ்மது ஆதமும்பின் அலிபுலாம் மீமாய்வந்ததென்ன
உகமை தாயோடு தகப்பனுமை ளுந்தியிருதய முண்டகமும்
பகரு ம்டிநடு முடிவுநாட்டம் பொருத்த மமையலைப் பிரித்துச்சொல்லும் 27

அருட்பால் பொருட்பால் காமப்பாலு மறிவுஹாஹீஹூதலமுமேது
இருள்வரும்போதில்வெளிச்சமெங்கே இரவுவரும்போதுபகலதெங்கே
பொருள் வந்தாசாளும் தபுசுமேது பொருத்தம் ஹளறத்தில் குதுசியேது
குருவினுபதேச மறிந்தபீரே குணமாய்மறுமொழி கூறுவீரே. 28

எல்லாநபிமாரு மொலிமார்களு மெடுத்து நடந்ததோர் வழியர்மிது
சொல்லாற் செயலாலும் ஹாலினாலுஞ் சொந்தமாகிய தவந்தானிது
நல்லார் பொல்லாரு மெல்லாருந்தானேமமாகவே நடக்கக்கடன்
கல்லா ரிதன்பயனுடைமாட்டார் கற்றோர்சற்றுகில்நாடுவாரே. 29

இந்த இல்மைத்தா னறியாதவ ரிந்தப்பாதையில் நடக்காதவர்
வந்த வழியதை விளங்காதவர் வாசிநிலையதைத் தெரியாதவர்
சொந்தப்பொருளதைப் பாராதவர் சூட்சக்கலிமாவை யிழந்தபாவி
மந்திக் குரங்கைப்போற்பல்லைக்காட்டி மார்க்கந்தெரியாமல்மோசமாவார் 30

மூலமுதலாறுவாதாரத்தை மூடியிருக்கின்ற முள்ளுக்காட்டை
வேலையாகவே ஐந்தெழுத்து வாளைக்கொண்டல்லோ வெட்டிச் சாய்த்து
யேலயேலவென் றிழுத்துச்சேர்த்து எரியநெருப்பிட்டுச் சாம்பலாக்கி
மூலமுக்கோணச் சக்கரத்தின் மூடிதிறக்கவே யோடுந்தண்ணீர். 31

கண்டதண்ணீரை வீணாக்காமற் கள்ளவாசலையடைக்கவேணும்
சொந்தக்குளமது இருதயத்தில் சேரும்படியாகச் செய்யவேணும்
கண்டங்கடக்கவேபாய்ச்சவேணும் கனலாய்நெருப்பினை மூட்டவேணும்
முண்டகத்தினி லூதவேணு மூலக்குகையதை யெழுப்பவேணும் 32

மாஉல் ஹயாத்தென்றதண்ணீரிது மன்னோன் கிலுறுக்குப் புகட்டிவித்தான்
சாவில்லாமலே யூழிகாலஞ் சங்கை நபியுல்லா ஹயாத்தானார்கள்
நாவிலவரினி னுமந்தன்னை நாடிக்கூப்பிட்ட தானந்தனில்
ஆவிநாவினிலடங்கு முன்னே யந்தத்தலந்தனி லிருப்பார்ஹிலுறு. 33

எழும்புமுக்கோணச் சூட்சந்தனை யெவருஞ்சொல்வார்கள ரியமாட்டார்
கழிம்பை யகற்றிடுஞ்சரத்தை யேற்றக் கனதியுடலெல்லாம் தம்மதாகும்
அழுக்குமுழுக்கெல்லா மழிந்துபோகு மங்கமழியாது மண்தின்னாது
கொழுப்புமாடுபோ லிருந்தாயானால்கோபமண்ணுக்குமிரையாமென்றார் 34

அறிவை யொஸ்தாதா லறியவேண்டு மலைந்து திரிந்துதான் படிக்கவேண்டும்
இரவுபகலெல்லாம் பழகவேண்டும் ஹிம்மத்தாகவேயிருக்க வேண்டும்
பறுலுசுன்னத்தை யிறுக்கவேண்டும் பண்பாய்ச்சறகதைப் பேணவேண்டும்
சறகைப்பேணாத சண்டாளர்கள் சறுகிநரகத்தில் வீழ்வர்தானே. 35

கடைசியாமாசை தெண்டிப்பான கல்பிற்றங்குவ தல்லாமலே
படைத்தோனெழிவது மஃரிபத்து பாவிகல்பினில் நிலைநில்லாது
மடமை ஹவாத்துன்யா வாசையாலே மவுத்து சக்றாத்தைமறந்தபாவி
படிக்கு மில்மது பலன்கொடாது பகைபதாகவே முடியுமென்றார். 36

2

உந்திவனத்தினில் அருச்சுண்டு முண்டகந்தனில் மகுருச்சுண்டு
இந்த ஆசிக்கு மலைருக்குக்கு மிடையிற் பெருந்திரை யேழுமுண்டு
அந்தத்திரையதுநாசூத்தென்று மறியமலக்கூத்து ஜெபறூத்தென்றும்
சொந்தலாஹூத்துஹாஹூத்துப்பின் சரிதான்பாஹூத்துஜெம்கூத்தென்
றார். 37

ஏழுதிரையது ஏழுகுணம் ஏதென்றறியவே பகரக்கேளு
கேளுமம்மாரு லவ்வாமாவுங் கத்தன் முல்ஹிமா முதுமஇன்னு
மீழுருளிய்யா மறுளியாவும் மீண்டுங் காமிலா யேழதாகு
மேழுநபுசது ஏழுகுணமெட்டாம் மக்காமது முஹப்பத்தென்றார். 38

முஹப்பத்தாகிய கொப்புமீதில் மகாமன் மஹ்மூது தானத்திலே
மகுருக்காகிய பறவைவந்து மறைந்து அரசாளு மஃபியாக
பகுமுமரத்தின்கீழ் ஆசிக்கென்ற பஞ்சவர்ணத்தின் கிளியொன்றுண்டு
அஹதுமக்காமிலே சேர்ந்ததானு லந்தக்கிளியதுசலாமத்தென்றார். 39

சலாமத்தாகிய வழியாமிது சிறுத்தல் முஸ்தகீம் பாதையிது
சுலாபத்தாகிய கடலாமிது சூட்சம் வலம்புரி நடனமிது
சுலாலத்தாகிய குடிப்பாமிது சுல்தானசீர் என்றவாழ்வுமிது
கலாமு சுபுஹானி குறுஆனிது கலிமாப்பொருளிது ஒளிவாகுமே.

மூலக்குகைதனி லூசிநாட்டி மூச்சைநூலாக்கிக் கோர்த்ததன்பின்
காலுதலைவரை யொன்றாய்மூட்டிக் காற்றுப்போகாமற் பீத்தலாலே
காலைப்பசுமாட்டைக்கறப்பதேபோற் கமலச்சுவாசத்தின் வழியதாலே
மேலைத்தெருவினிற்சரத்தையேற்ற மேலோன்குதறத்து வெளியாகுமே. 41

யாவென்றெழுத்தது இரும்புஊசி யாவென்றெழுத்ததை எழுப்பியேபின்
ஹூவென்றெழுத்ததுஊசிக்காந்தம் ஹூவில்யாவந்துசேரவேண்டும்
ஹூவென்றெழுத்தில் யாகொழுவி நின்றால் ஹூவைக்காணலா முண்மை
சொன்னேன்
ஹூவென்றெழுத்தில் யாகொழுகாவிட்டால் ஹூவைக்காண்பது மிருளா
மென்றார். 42

இல்லென் றெருசத்தம் முழங்கும்வாயல் ஈமான் மாணிக்கம் விழை
யும்வாயல்
அல்லும்பகலது முழக்கமாக, வடைப்பும் துறப்பதும் இல்இல் என்று
சொல்ல விரும்பதை யடிக்குமாப்போல் கோனேன்றிருவாயற் கதவிரண்டும்
மெல்லமெல்லவே யடிதொடங்கு மீளத்திறந்திடுங் கமலவாயல் 43

மங்கூசாகிய மஉக்கூசிது மங்காக் கமலத்தின் விளக்காமிது
அங்கத்தழுக்கெல்லா மழிக்கச்செய்யு மாண்டவிபுலீலைஒடச்செய்யும்
பங்கப்பழிப்பெல்லாம் பறக்கவைக்கும்பாதாளத்தினில்மைவெளிக்கும்
தங்கக்குடத்தினில் முத்திரத்னந் தாலி வெளியாகுந்தானே என்றார்.

பறக்கும் வேட்டாளம் புழுவெடுத்துப் பதறியலறித் தன்கூட்டில்வைத்துப்
பாத்தி நாமத்தி னெழுத் தொன்றாலே பறந்து ஹூஹூவென்றாதலூதக்
கருத்துநினைவதின் நாதந்தாவிக் கதறிக்குழவிபோற் பறந்துபோகும்
சாத்தில்ஹேவாவைப்பழகிவந்தால் சங்கைகுதாயிடம் சேர்வார்தாமே

முத்துமுகப்பினில் முச்சந்தியில் முச்சுடரான கண்ணாடிக்குள்
குத்துவிளக்கொன்று எரியுதுபார் குழந்தைபோல் ரூபந்தெரியுதுபார்
பத்துந்திரியில்லை எண்ணெயில்லை பாரிலொருத்தரும் தூண்டவில்லை
குத்துநுக்கத்தது குருவுமது குதுசியாகிய றூஹாகும்மே. 46

நூனிலடங்கிய நூறுமது நூனில் முந்நூறுங் கடலுமிது
சீனிலடங்கிய சிற்றுமிது சிறந்த சுழி முனைவீடாமிது
நானென்ற சொல்லுக்கதிகாரமாய் நாடநாடத்தான் முடுகச்செய்யும்
"நூன்வல்கலமி" சூறத்திலே நூனென்றுரைப்பது ஒளிவாகும்மே 47

அலிபைக் கமலத்திலறியவேணு மலிபுலாமீமை யறியவேண்டும்
அலிபுநிலையதை யறியவேணு மலிபின் உஜூதைத்தா னறியவேண்டும்
அலிபில்ஆசிக்கையறியவேண்டு ம்அலிபின் அசிலைத்தானறியவேண்டும்
அலிபின்சூறத்தை யறியவேண்டும் அலிபாய்க்கபன்செய்து அடக்கமுன்னே.

மூலமென்றது முக்கோணமா முழுதுமாணிக்க நிறமதாகும்
நாலுஇதழான புஷ்பமது நவிலக் குண்டலிஸ்தானமது
தூலத்தெளிவான வொளியுமாகுந் துய்யவோங்கார வட்டமாகு
மாலகாலமு மழியாமலே யதுதான் சுல்பென்ற வித்தாகும்மே. 49

இதற் கிரண்டு விரற்குமேலே யிருப்பதாகுஞ் சுவாதஸ்தான
மிதினால் சதுரத்தின் நடுவிலாறு இதழ்களுளவொரு புஷ்பவட்டம்
மிதியின் மத்திலிங்கவட்ட மிலங்குஞ் சுவாதிஸ்தான் நடுமத்தியில்
கதையிலாறான வாதாரத்தின் கணக்கைக் கேளுங்க ளிகுவான்களே.

இந்தச்சுவாதிஸ்தான் மேற்பாகத்தி லெட்டுவிரற் பிரமாணத்தின்மேற்
றொங்கியிருக்குது மணிபூரகந் தோணுமது கோழி முட்டையேபோல்
அந்த நானூற்று நாற்பத்தெட்டு அணிபாய் நாடியும்நரம்புங்கூடி
வந்துவேரூன்றி முடிச்சியாக வுந்திக்கமலந்தா னிதுவாகும்மே. 51

உந்திக்கமலந்தான் தொப்புள்நேரே யப்புஸ்தானத்திலிருந்து கொண்டு
பந்தம் போலவே பிரகாசிக்கும் பழையபுதையலை வெளிப்படுத்தும்
நந்திக்குருமொழி மந்திரத்தை நாடநாடத்தான்தந்தி பேசு
மிந்தவாதாரமூன்ருவது இனிநாலது நாபிக்கமலமென்ருர். 52

நாலாமாதாரம் நாபிக்கமலம் நவில வைந்தது வனுகதந்தான் [னேன்
மேலாமாறது கண்டஸ்தான மெய்யாய் விளங்கத்தான் யானுஞ்சொன்
மேலாமாதார மாறையுந்தான் மேவியப்புறந் தாண்டிச் சென்ருல்
நூலாம் கூறுலீன்பெண்கள்வந்து நுனித ராகத்தை இழுப்பார்களே.

நிகழுமைம்பூத மெழுகுக்கப்பல் நெருப்புக்கடலிலேயோடவேணும்
பகாத்துறைமுக மைந்துண்டுகேள் பதறப் பதறத்தா னேடவேணு
மகண்டதுறைமுக முதலாவது மதுதான் சக்ருத்துமவுத்ததாகும்
தகுந்த சக்ருத்துத் துறைமுகத்தில் தனியத்தனியத்தா னேடுங் கப்பல் 54

சுழியுந் தூபானி லோடும்போது சுக்கான்சரியாகப் பிடிக்க வேணும்
நளினத்திரு னேட்டமுருக்கபாவை நேமப்பாயாக வுயர்த்தியேற்றி
யொழிவு முசாகிதாமு அல்லிமாகி ஓர்மைத்தௌஹீது நங்கூரமா
யழியா ஹிம்மத்தைப்பூட்டிவிட்டா லைந்தாந்துறைமுக மோடுங்கப்பல்

இரண்டாந்துறைமுகம் கபுறதாகும் றஹ்மான்சோதனை செய்யுந்தலம்
மூன்ருந்துறைமுகம் மகுசர்வெளி முற்ருய்க்கணக்கெல்லாம் பார்க்குந்தலம்
மீண்டுந் துறைமுகம் நாலாவது மீசான் சரக்கெல்லாம் நிறுக்குந்தலம்
நீண்டதுறைமுக மைந்தாவது நீட்டசிருத்தெனும் பாலமென்ருர். 56

ஹாமீம் நபியுல்லா வருளிச்செய்தார் ஹலறத்தாகிய குதுசியிலே
சீமானிடத்திலே மூடுகும்போது சிறந்தகையையென்முதுகில்வைத்தான்
காமிலாகவே குளிர்ந்து போச்சுக்கால் முதல்தொடுத்துச் சிவரை
கோமான் ரகசியங் கலிமாசிற்றைக் கூர்மையென் கல்பில் சொரிந்தா
னப்போ. 57

இறைவன் பேச்சது நபியிடத்தி லீராருயிரம் பகாக்கேளு
மிறசூல் பேச்சது ஹக்கிடத்தி லீராருயிரஞ் சரிநிதான
மறுநான்காயிர மொத்தமாவ வல்லாமுகம்மது மிருவர்பேச்சு
மறுநான்கெழுத்திலே யிருவர் பேச்சை யல்லாவடக்கினுன்கலிமாவிலே 58

அறுநான்கெழுத்தினின் ரகசியத்தை யல்லாவடக்கினுனிரண்டெழுத்தி
லறுத்தமாகிய விரண்டெழுத்து அதுதான் கலிமாவினுபிரெழுத்து
அறிய சூறத்தில் பகருவுக்கும் ஆலஇம்ருனுக்கிடை நடுவி
லுறுதியாகவே வருகுதென்று மறியக்கடனென்று மிறசூல் சொன்னுர் 59

இந்த விரண்டெழுத் தல்லாவினின் ஹிவிய்யத்தாகிய தாத்தின்பேரில்
பொருந்தமாகிய தலாலத்தாகுஞ் சோதிருவியத்துஸ்ஸாரியாகு [டும்
மெந்தவொகுத்திலும் சாஅத்திலு மெண்ணிநினைவினிற் பூட்டவேண்
சிந்தைமகிழவேயறிந்தபேர்கள்ஜென்னப்பதிதனிற் சேர்வார்களே 60

இருக்கும் முதலெல்லாம் கொடுத்திட்டாலு மிரவு பகலெல்லாம் வணங்கினும்
வருஷம் முழுநோன்பு பிடித்திட்டாலும் வரிசைஹஜ்ஜது செய்திட்டாலும்
ஹறத்தில்கிதாபெல்லாமோதினு மநேகநன்மைகள்செய்திட்டாலும்
கருத்திலிதுரண்டையறியாதவர் கடைசிநரகத்துக் கிரையாமென்றார்

அறுஹமாகிய ரூஹிமவ னடியான்பேரினி லேக்தொகுத்தைப்
பறுலாய்நேமித்தான்மிகுரூஜிலேபறுலுத்தொழுகைதான்கடனாகவே
ஷறஇல்ஷரீ அத்துமார்க்கச்சட்டம் சரியாய்ப்பேணாதோர்முஸ்லிமில்லை
இறசூல்நபிசொன்னார் முஸ்லீங்கட்கு மிந்தத் தொழுகைதான் மிகுரூ ஜென்றார். 62

ஆதியல்லாகு தொழுகையதை யமைத்தான் அஹ்மதின் கோலந்தன்னில்
சோதிநிலையது அலிபதாகுஞ் சங்கைறுகூஅது ஹேபதாகும்
நீதிசுஜூதது மீமதாகும்நிறைந்தஇரிப்பது தாலதாகும்
ஆதியஹ்மதின் கோலந்தனை யழகாய் வணங்குங்கள் முஸ்லீம்களே. 63

நாட்டிலிஸ்லாமிற் பிறந்தோமென்று நாடித்தொழுகையை விட்டுப்போட்டு
சாட்டுக்கிஸ்லாமின் கோலம்பூண்டு சண்டிமாடுபோல்தின்றுகொண்டு
மோட்டுத்தனமாக நடக்கும்பாவி மூடனிபுலீசுசொல்லைக் கேட்டு
பூட்டிக் கைகாலைநரகத்துக்குப் பிடித்து மலக்குகளிழுப்பார்களே. 64

இன்னுஞ் சிலபேர்கள் முஷ்ரிகீன்கள் இணையையதுகொண்டு வணங்குவார்க
ளெண்ணு மெண்ணங்கள் பெருமையாக வெண்ணி மனிதர்களறியவேண்டி
தன்னைமதிப்போடு ஹசத்கபடந் தப்புமுகவிச்சை யெல்லாங்கூடி
யெண்ணித்தகுபீரைக் கட்டிக்கொண்டு ஏகக்கல்பதைமேயச்செய்வார். 65

இந்தவணக்கந்தானிணையாய்விமெிறையோனிதைகபூல்செய்யமாட்டான்
எந்தக்கிதாபையு மெடுத்தோதினு மேதுஹதீதையுஞ்சொன்னபோதும்
மந்திக்குரங்கைப்போல் முந்திப்பாய்ந்து மடமை கல்பினினோநீயோ
இந்தவெண்ணத்தில் வணங்கும்பாவி யிறையோன் முனிவினிலாவாரென்றார்

இந்தக்காரிய முழுதுமாக விறையோனறிவித்தான் குறு ஆனிலே
யந்த ஆயத்தையருளக்கேளு (அறஇத்தல்லதீ) எனும் சூறத்தில்
சொந்தமொழியது (பவைலுன்லில்மு சல்லினல்ல)·தீனதொடுத்து
அன்சலாத்தி ஹிம்சாஹூன்வரை யல்லாவருளினுனபியும்மத்தே. 67

ஒதுமாயத்தின் பொருளாவது வோடைநரகமாந் தொழுதபேர்க்கு
மாதிநாயனை மதிமறந்து மனுவு நினையாமற் பயமில்லாமற்
காதுகல்பெலாந் தடுமாறிப்பின் காசுஎன்னும் பேராசைபூண்டு
யாதுபிசகுடன்தொழுதபேர்க்கு ஏழாம்நரகத்திலொயிலாமென்றார்

இன்னுஞ் சிலபேர்கள் வணங்குவர்க ளிறையோன்ஹளறத்தில் வாசிலாவார்
சுன்னத்தாகிய ஜமாஅத்தானோர் சுன்னத்தொன்றையும்விடவுமாட்டார்
தன்னையறிந்தோர்கள் முஉமினீன்கள் தங்கமாகிய யாசிகீன்கள்
மன்னோனவன்றனின் தீதாறன்றி மாறிமொன்றையுநாடமாட்டார் 69

அலிபுநிலைதனை நாடுவார்கள் அலிபுநாட்டத்தில் தொழுகுவார்கள்
அலிபை யுருவாக்கி வணங்குவார்கள் அலிபுலாம்மீமை யறிந்தபேர்கள்
அலிபினுசிக்கில் உறுஜாவார்கள் அலிபுலாமீமில் நுசூலாவார்கள்
அலிபினசலான வட்சரத்தை யறிந்து தொழுதோர்கள் வாசிலானோர். 70

இவர்கள் வணக்கத்தி லுறப்பும்றாகு மிணங்கி யொன்றாக வணக்கஞ்செய்யும்
கவலையவர்க்கில்லைச் சலிப்புமில்லைக் கபடம் கசதில்லை பெருமை இல்லை
யிவர்கள் ஹக்காகமுஉமீனென்றும் இறையோனறிவித்தான் குறுஆனிலே
நவிலவாயத்து (கதுஅபுலகல்) (முஉமினூ) னென்று அல்லாசொன்னான். 71

பாரிலுள்ளோர்க ளறியவேண்டிப் பாரமாகிய யில்மின்பாதை
மாரி மழையது சொரிவதேபோல் மகுருக்காகிய மாலைதன்னைக்
காரு மானத்தின் காரணத்தைக் காதிறானவ னாரணத்தை
யேறுசூரியப் பிரகாசம்போ லெவருமறியவே யானுஞ் சொன்னேன்.

தீனின்விழக் கபூபக்கருமர்உ துமா னலியாரின் பொருட்டினாலு
மானின்பினை நின்றோர் பேரான மணமாம்ஹசன்ஹுசைன்பறக்கத்தாலும்
னானில்மகுபிய்யா ரகசியமாய் னாரும் முகிய்யித்தீன் கிருபையாலும்
சீனின்சிற்றான காத்தைக்கொண்டு சிறியேன் சலாமத்திற் சேர்ப்பாயாக,73

கடினக்கடலது சக்றாத்தினிற் கடகடென்றி சுறாயில்வரப்
படபடவென்று துடிக்கும்றாகு பதறப்பதறத்தா னிழுக்கச்செய்வார்
இடிலும் வெடிலுமாய்ப் பிடிக்காமலே ஈமான் தடுமாறிப் போகாமலே
யிடறிப்போகாமற் றுழும்பாமலே யீமானரு ளெனில் யாஇலாஹி 74

ஏழுகடலையோர் கடுகுக்குள்ளே இதமாய்ப்புகட்டத்தான் குதறத்தானோன்
ஆழிக்கடலிலே கருங்கல்லுக்குள் அமைந்தவெறும்பதின்சத்தந்தன்னை
யூழிகாலமு மிடைவிடாம லுண்மைக் காதின்றிக் கேட்பவனே
யேழை செய்பிது முகம்மதுபிள்ளையிரங்கிக் கிருபைசெய்யாறஹீமே. 75

பாவக்கடலிலே தாண்டபாவி பதறிக்கதறியே கரையிலாமற்
சீவன்மோசத்திற் போகாமலே சிறந்த குதறத்தின் கரத்தைக்கொண்டு
தாவிப்பாலகன் சறுகும்போது தாயார்பதறி வந்தள்ளுமாப்போல்
பாவியென்கையைப்பிடித்துத்தாங்கிப் பௌஸாம்கலாசியத்தருளிலாஹீ
எனது தாய்தந்தை யினத்தோர்களை யென்னிற் கிருபையாய் நடந்தோர்களை
மனதிலறிவித்த வுஸ்தாதையும் மற்று மும்மத்தோ ரடங்கலேயும்
நினைவிற் சொற்பிழை கவனமாக நோட்டமிட்டபின் திருத்தும்பேரை
தினமும்பாவத்தைப்பொறுத்துயீமான்றிரவியந்தனையருளிலாஹி. 77

மகுஷமீக்குமாலே முற்றியது

---

## முஹிய்யதீன் ஆண்டவர்கள்பேரில் முனாஜாத்து

### விருத்தம்

ஆதியுமனாதியாசை யக்கினிக் கடலாய்ப்பொங்கிச்
சோதியாய்ச் சுடராய் வீசிச் சுழித்ததோ ரெழுத்துமாகி
நீதியர் நிலேயாய் நின்றே நினைவினி னடுவாய் நிற்கு
மோதியுமோதாச் சிற்றின் ஒழிவருள் முஹிய்யித்தீனே. 1

அலிபுலாம் ஹேயுமீமு மானதோர் தானுமாகி
மெலிவிலா தெழுசிபாத்தும் மேலவன் குதுசிதானுங்
கலியெனுங் ஹாமீவுமீமுங் காட்சியுங் கமலக்கண்ணால்
பொலிவுரு மக்காம் சேரப் பவுசருள் முஹியிய்த்தீனே. 2

ஆலமோடறுசும் குறுசு மானதோர் வானம்பூமி
கோலமும் குறிப்புமற்ற குதாயருள் கிருபையாலே
காலமுமிடைவிடாமற் கருணைதந்தாளு மையா
ஸ்தூலமும் றாகைக்கார்த்து துணையருள் முகிய்யித்தீனே. 3

மண்டல மாகாயத்தை வளைந்ததோர் வெள்ளை மேகம்
குண்டலஞ் சிவப்பு மேகம் குறித்ததோர் கருமேகத்துள்
பண்டு நம் மாதிசோதி பவனியா யிருந்த தன்றே
மண்டபக் கொலுமேடைக்குள் மறைந்த யாமுகிய்யித்தீனே. 4

இராப்பகலற்றிடத்தில் ரகசியப் பொருளே கனியே
காபு நூன் நடுவுக்குள்ளே கபிய்யதா யிருந்த காவே
மாபு செய் தருளு முங்கள் மலரடி கெஞ்சினேனே
தீபமே யொளியே சுடரே திங்கள் யாமுகிய்யித்தீனே. 5

துற்றத்துல் பைலாவென்னும் துற்றதினுள்ளுறைந்து
குற்றத்துல் ஐனுமாகிக் கூறுமக்கூராமிருளில்
கற்றத்து நூறுநாறு காற்றுடன் மாத்துருபாய்
மற்றத்தன் உக்று முத்தில் மறைந்த யாமுகிய்யித்தீனே. 6

சேருடன்சவரும் பேசும் சத்தமு மெழுத்துமற்ற
நூறுடன் குறுஆனென்னும் நூதனத்திரைவளைந்து
சூறுடன் இஸ்ருபீலுஞ் சூஸ்திரக் கண்ணாடிக்குள்
ஊருடன் பேறுமற்று முதித்தயா முகிய்யித்தீனே. 7

நாசமே நாலுபேரை நாடியான் நடந்தபாவி
மோசமே வைத்தானென்று மோகனித்துன்யாரெண்டு
நேசமெய் கல்குமூன்று நபுசது அம்மாறுவும்
தோஷமின் நாலைவிட்டுத் துணையருள் முகிய்யித்தீனே. 8

வேதமாம் குறுஆன் தன்னில் வெற்றிநல் லிகுலாசுக்குள்
நீதமாய் ஐந்துதாலும் நிகரிலான் சிற்றதாகும்
ஆதமாம் ஹகீகத் தாதம் ஐந்ததிற் புதையலாகி
ஓதஹூம் கோட்டைக்குள்ளே யொழித்தயா முகிய்யித்தீனே. 9

மிஸ்காத்துன் மிஸ்பாகும்பின் மிஸ்பாகுன் கண்ணாடிக்குள்
இஸ்மதாம் நூறுனிய்யா யிலங்குமே சுஜாஜதுக்குள்
அஸ்லதாய் எரியும் சைத்தூன் ஆனதோர்மரத்தில்நின்று
ஒஸ்ததுக் குள்ளிருந்து ஒளிதரும் முகிய்யித்தீனே. 10

அஹதவன் பாதை நாலா மடியது ஷரியத்தாகு
முகந்ததோர் தரீக்கத்தோடு உண்மையுள் ஹகீகத்தாகும்
பகர்ந்திடும் மஃரிபத்தில் பலம்ஏனிற் றுருமையா
பகலிரவற்றிடத்தில் பவுசருள் முகிய்யித்தீனே. 11

காப்ஹாயா ஐன்சாதின் காட்சியைக் காதலித்தேன்
யாபகத் தோடிருக்கும் அடியனைக் கைவிடாமல்
காபுநூன் குணத்திலாக்கிக் காட்சிதந் தாளுதற்குச்
சூபிய்யாக் கூட்டஞ்சேரச் சுகமருள் முகிய்யித்தீனே. 12

குப்புடன் சும்மை பாலாய்க் குடித்துயான் மடத்தனத்தில்
றப்புவின் கோப மென்னும் ரகசியத்தூதன் வந்து
தப்புநீ மாறுசெய்தாய் தனியவன் பொறுக்கமாட்டா
னப்புற முன்களருளை நம்பினேன் முகிய்யித்தீனே. 13

ஆதியே குதுபே கௌதே ஆஷீகே சிரோன்மணியே
நீதியே நிறைந்த வாழ்வே நிராமயமான ஹூறேவே
சோதியே சுடரே மணியே சூட்சமேகலீபத்துல்லா
காதிறே தஸ்தகிரே கண்மணி முகிய்யித்தீனே. 14

கனமது மவுத்து வேளைக் காலனைக் காணும்போது
இனமது நாலுறூஹின் இருப்பிடங் குலைந்தே போகும்
மனமது பதறும்போது மலரடிப்பாதந்தந்து
தினமெனி லிரங்கு மையா தீபமே முகிய்யித்தீனே. 15

வேதமு முழங்குகின்ற வெற்றிநல் மிம்பர்மீதில்
வேதைதீர் சங்கீதம்பின் விசையொடு ராகம்பூட்டித்
தூதராம் நபியுல்லாசொல் துலையாமல்ஜூம்ஆகுதுபா
வோதிய வொலிமார்க் கெல்லா மோரிமாம் முகிய்யித்தீனே. 16

தன்சிகும் தஸ்பிஹைப்பின் தவத்தினில் மகழதாக்கி
மனதினி லுண்மைகொள்ளு மகுஅது சிதுகுமாகி
கன்சினில் ககாயிகென்னும் காரணப் பொருளைக்காண
அஞ்சியான் செஞ்சினேனே யருள்தரு முகிய்யித்தீனே. 17

அம்மாறு வாசபாசை யதின்குணம் பொய்யுஞ்சூதும்
எம்மாத்திர மிருந்தா லேகனிற் சேரொணுது
சம்மாண மாயிருந்து சாகுமுன் சாகச்செய்து
சும்மாதா னிருக்கவென்னிற் சுகூதருள் முகிய்யித்தீனே. 18

முச்சுடர்வட்டத்துக்குண் முன்நிலை வளைவுக்குள்ளே
யச்சுடராகிவந்த வஹ்மதின் பேரானூர்
மச்சுமா மாளிகைக்குள் மகுபிய்யா யிருந்தவள்ளல்
அட்சரம் ஐம்பத்தொன்றி லடங்கும் யாமுகிய்யித்தீனே. 19

காத்திரம் கபுறுக்குள்ளே காணவேவருவார் பத்தான்
நேத்திர மின்னைப்போலு நிறமவ ரிருளைப்போலு
மாத்திரக் கசையுங்கையி லத்துடனிடிபோற்சத்தம்
சேர்த்தவர் சுவால்கள் செய்ய ஜவாபருள் முகிய்யித்தீனே. 20

அண்டமு மவனியேழு மானதோ ரமரர்கட்கு
மென்றுமே இன்சும் ஜின்னுக் கேகமாய்க் குதுபாய்வந்த
மண்டல மைந்துக்குள்ளே மவுனமா யரசாயாளு
முண்டகப்பொருளே பூவே முத்து யாமுகிய்யித்தீனே. 21

இருவினையறுத் தெறிந்து இருதயக் கமலஞ் சென்ற
ஒருபொரு ளோரெழுத்தை வாசியி லிழுத்து வாங்கி
கருவெழுத் தாக நிற்கும் கமலச் சிங்காசனத்தி
லொருபொரு டன்னைக்காட்டு முண்மை யாமுகிய்யித்தீனே. 22

பேரின்பமான முத்தி பெற்றிட வாசைவைத்தேன்
ஆரம்பித் தனேககால மத்துடன் முயற்சிசெய்தேன்
சேரின்பம் பாரதென்று செப்கவர் காட்டும்பொருளைப்
பார் இன்ப மென்றணுப்போல் பார்த்தருள் முகிய்யித்தீனே. 23

யாஅப்துல் காதிறென்றும் யாமுகிய்யித்தீனதென்றும்
யாபேரும் சத்தம்வைக்க யாபேர்க்கும் வெற்றியுண்டாம்
யாறூஹே மணியே யென்று யாதுடன் கெஞ்சினேனே
யாகுதுபே கௌதே மத தே எங்கள்யாமுகிய்யித்தீனே. 24

ககனமும் பூமியேழு காடதும் கடலும் கரையும்
பகலுடன் இரவும் பொழுதும் பறவைகண் மற்றுயாவும்
நிகரிலானும் வசத்தி னீங்கிடா வாழ்வைத் தந்தான்
சகலரு முதவிதேடும் சங்கையா முகிய்யித்தீனே 25

ஞானமுங் கல்வி யில்லான் சாகரந்தானுமில்லான்
கானலை நீரென் றெண்ணிக் காதலால் தவித்தபாவி
தீனினில் நிலைநிறுத்தி தீதாறைத் தாருமென்னில்
சீனெனுங் கண்ணடிக்குள் சிறந்த யாமுகிய்யித்தீனே. 26

யாரிடஞ் சொல்வேன் காணே னென் மனத்துயரந்திரக்
காரிருண் மேகம்போலே கல்பது இருளடைந்து
காரியந் தப்பிவிட்டால் கவலையென் ஓயாதையோ
காரணக்கடலே குருவே கண்மணி முகிய்யித்தீனே. 27

ஐந்துபே ரஸூலுல்பைத்தி னன்புடன் பறக்கத்தாலும்
கெஞ்சினேன் நாலுயார்கள் கிருபையின் கடாட்சத்தாலு
மஞ்சிடா முகாஜிரீன்சா படங்கலின்பொருட்டினாலும்
நெஞ்சிலென்றிரையை யகல நயமருள் முகிய்யித்தீனே. 28

அண்டமு மமரர் போற்றும் ஹமீதொலி பாதம்போற்றிக்
கண்டேமன் காணுமஸ்தான் குணங்குடிதாள் பணிந்து
மண்டலக் குதுபுமார்கள் மலரடிசிரமேல் வைத்தேன்
முண்டகப் பொருளைக்காண முடிவருள் முகிய்யித்தீனே. 29

அன்பு நல்சமானின் குதுபு ஆனதோர் செய்யிது அலவி
மம்புரம் மலையாளத்தில் மறைந்தவர் வரிசையாலும்
பின்புகம் பீர்முகம்மது சாகிபின் கிருபைகொண்டு
பண்புகல் விகுலாசுந்தௌ பீக்கருள் முகிய்யித்தீனே. 30

ஐயறிவான வெந்த னைம்புலன் பதறுதையோ
வையக மீதிலார்வே றென்மனத் துயரந்தீர்க்க
செய்யிது முகம்மதென்போன் செய்பிழை யகலச்செய்ய
கைபெடுத்தேந்தினேனே கௌது யாமுகிய்யித்தீனே. 31

முஹிய்யதீன் ஆண்டவர்கள் அவர்கள்பேரில் முனுஜாத்து
முற்றிற்று.

---

## பிஸ்மிப் பாட்டு.

### காப்பு—விருத்தம்.

பிஸ்மில்பே நுக்கத்தில் நின்று விரிவுட னுலகம் யாவும்
இஸ்மதாம் ஜலாலத் தென்ற விறையவன் றிருநாமத்தாற்
றுஸ்மனைத்துரத்தி யானுந் துய்யவன் கிருபை கொண்டு
பிஸ்மியின் பொருளைக் கூற வித்தனே காப்பு நீயே.

### கண்ணிகள்.

1. பிஸ்மியினுள்ளமை விரிவாகச்சொல்லம்மா தாயே அது
விள்ளொண்ணுவாகிலும் விள்ளுறேன் கொஞ்சத்தை மகளே

2. பிஸ்மில்லா வென்றுமுன் யார்சொன்ன சொல்லம்மா தாயே அது
பில்லாகி நாமங்கொண் டல்லாக லாமது மகளே.

3. அல்லாகலாமுக்கு ஹறுபேது தொனியேது தாயே அது
ஆதிஜி பிரீலின் நாவில் வெளியாச்சு மகளே.

4. எழுத்துக்களெத்தனை பிஸ்மிபி லுண்டு மென் தாயே அது
எழுத்தொன்று போக விருபததல்லவோ மகளே.

5. நவிலு மெழுத்ததிற் றலையெழுத் தேதம்மா தாயே அது
நான்குமறையும் பொருந்திய பேயாகும் மகளே.

6. பேய்க்குமுன் முந்திய தேது எழுத்தது தாயே அது
பேய்க்குமுன் முந்திய நுக்தாவதல்லவோ மகளே.

7. நுக்தா வதில்நின் றென்ன வெளியாச்சு தாயே அது
நுக்தா வதில் நின் றுலகம் வெளியாச்சு மகளே.

8. நுக்தாவில் நின்று வெளியான தெப்படி தாயே அது
நுக்தா தான்நூறு முகம்மதே யாகுமென் மகளே.

9. நூறுமுகம்மதென் றென்னத்தைச் சொல்லலாம் தாயே அது
நூறுமுகம்மதி னுள்ளமை யாகுமென் மகளே.

10. நூறுமுகம்மதி னுள்ளமை யேதாகும் தாயே அது
நூனென்ற வட்டத்துள் குத்தூசியாகு மென்மகளே.

11. குத்தூசியென்பது எங்கே யிருக்குது தாயே அது
குத்தூசி யெங்கும் சமதா யிருக்குதென் மகளே.

12. பிஸ்மியிற் சீனென்ன மீமென்ன சொல்லம்மா தாயே அது
பிஸ்மியிற் சீன்சிற்று மீமது நூருகும் மகளே.

13. சிற்றுடன் நூறதின் சூட்சத்தைச் சொல்லம்மா தாயே அது
சிற்றெண்டால் ரகசியம் பீரிடங் கேளுமென் மகளே.

14. பீரென்றால் யாராகும் பிரிவதைச் சொல்லம்மா தாயே அது
பீரென்றால் தன்னுக்குள் பீரையறிந்தவர் மகளே.

15. தன்னுக்குள் பீரை யறிவது மெப்படி தாயே அது
உன்னுக்குட் பாராம லுளறுவ தேனடி மகளே.

16. இஸ்முல் அஃளம தெந்த இசுமது தாயே அது
இஸ்முல் அஃளம் ஹூவென்ற இஸ்மாகும் மகளே.

17. ஹூவென்ற இஸ்மது உடலுக்கு ளெங்கேசொல் தாயே அது
ஹூவது நடுநிலை வாயலைப் பாருநீ மகளே.

18. வாயலைப்பார்த்தாற் பலனேது சொல்லம்மா தாயே அது
பாபுஸ்ஸலாமத்து ஊமை யெழுத்தாகும் மகளே.

19. ஊமையன் எங்கே யிருக்கிறான் சொல்லம்மா தாயே அது
ஊமையன் மத்தியிற் றாங்கிறான் பாருநீ மகளே.

20. மத்தியி லெத்தனை வாயலிருக்குது தாயே அது
மத்தியி லிருவாயல் ஜெம்கூத்து வாயலாம் மகளே.

21. ஜெம்கூத்து வாயலுக் கப்புற மேதம்மா தாயே அது
ஜெம்கூத்துக் கப்புற மாயப்பெருவெளி மகளே.

22. பிஸ்மில்லா வென்றதி லல்லாவின் பொருளென்ன தாயே அது
விள்ளொண்ணு விண்டாலுந் தட்டழிவாகு மென் மகளே.

23. தட்டழிவான துடலுக்கு ளேதம்மா தாயே அது
தற்பரத் தற்புதக் கண்ணுடிக் குள்ளொலி மகளே.

24. காணுஞ் சொரூபத்தின் காரண மேதம்மா தாயே அது
கருவாகி நின்றதோ ரிருளொளி யாகுமென் மகளே.

25. இருளி லிருந்த பொருளேது சொல்லம்மா தாயே அது
இருளி லிருந்தநூ ரூகாச மாகுமென் மகளே.

26. நூறுமுகம்மது ஆருக்கோ மருக்கோ தாயே அது
நூறுமுகம்மது மருக்க தாகுமென் மகளே.

27. கலிமாவி லாரூக்கு மருக்க தேதாகும் தாயே அது
கலிமாவின் பின்பாதி மருக்க தாகுமென் மகளே.

28. முன்பாதி பின்பாதி யேதாகுஞ் சொல்லம்மா தாயே அது
முன்பாதி கலியாகும் பின்பாதி மாவாகும் மகளே.

29. கலியென்றும் மாவென்றும்பிரிவென்ன சொல்லம்மா தாயே அது
கற்பித்தபெற்றுரி ஞசை இரண்டுமாம் மகளே.

30. இரண்டாசை யொன்ருகும் போதென்ன காரணம் தாயே அது
இரண்டாசை யொன்ருனு லுற்பத்தி யாகுமென் மகளே.

31. மூலத்தின் தீயி லுருகுவ தேதம்மா தாயே அது
மூளையுருகிய நாதம தல்லவோ மகளே.

32. நாதத்தி லைம்பூத மொன்ரு யிருந்ததா தாயே அது
நாத முருகும்போ தொன்ருன தாகுமென் மகளே.

33. இல்லென்ற சத்த முழங்கிய தெவ்விடம் தாயே அது
இன்பக்கடலில் முழங்கியதாகு மென் மகளே.

34. குன்குதாத் தென்பது ஏதாகுஞ் சொல்லம்மா தாயே அது
குறிப்பற்ற மறுத்தபா குன்குதாத் தாகுமென் மகளே.

35. வாசியி லேறிப் பழகுவ தெப்படி தாயே அது
வானத்தின் வாயற் றிறக்கும் வழியடி மகளே.

36. வானம தென்றசொல் ஏதாகும் விள்ளம்மா தாயே அது
வானம தென்றசொல் மேற்சிர சாகுமென் மகளே.

37. பிரதான சிரசின் பிரசித்த மே தம்மா தாயே அது
பெரியோன் கிருபைக் காங்கொண்டு வைத்ததாம் மகளே.

38. சிரசினில் றஹ்மா னிருப்பிட முண்டுமோ தாயே அது
சிரசென்று லறுசாகும் குறுஆனைப்பாரு நீ மகளே.

39. பிஸ்மியி னல்லாவி லிருலாம தேதம்மா தாயே அது
விபரம் ஜலாலும் ஜமாலின் ஹறுபாகும் மகளே.

40. ஜலாலும் ஜமாலும் அரூபி சுரூபியோ தாயே அது
ஜலாலு மரூபி ஜமாலும் சுரூபியாம் மகளே.

41. அரூபி சொரூபியென் றென்னத்தைச்சொல்லலாம் தாயே அது
அல்லா முகம்மது தாத்துஞ்சி பாத்தாகும் மகளே.

42. அல்லா முகம்மது ஆதம தேதாகுந் தாயே அது
அஹதிய்யத் தொஹ்தத்து வாஹிதத் தாகுமென் மகளே.

43. அஹதியத் தொஹதத்து வாஹீதி யேதாகுந் தாயே அது
அலிபுலாம் மீமென்ற அட்சர மாகுமென் மகளே.

44. அலிபுலாம் மீமது வுடலுக்கு ளேதாகும் தாயே அது
உந்தி யிருதைய முண்டகமாகுமென் மகளே.

45. உந்தி யிருதைய முண்டகத் தெழுத்தேது தாயே அது
உயிரெழுத்தாகிய ஹா ஹூ ஹீ யாகு மென் மகளே.

46. ஐம்பத்தோ ரட்சர மறியநீ சொல்லம்மா தாயே அது
அலிபுநூன் ரெண்டுக்குட் கொழுகி யிருக்குது மகளே.

47. கொழுகி யிருக்கின்ற கூறதைச் சொல்லம்மா தாயே அது
கூறு மிருநூற்றுப் பத்தொடு நாலது மகளே.

48. இருநூற்றுப்பதினாலென்றென்னத்தைச்சொல்லலாந்தாயே அது
இருநூற்றுப் பதினாலு றூஹெனுஞ் சொல்லாகும் மகளே.

49. உண்மை கொழுகிய கூறதைச் சொல்லம்மா தாயே அது
உச்சிக்குக் கீழேயுள் நாக்குக்கு மேலேயாம் மகளே.

50. உச்சிக்குக்கீழே யிருக்கிற தேதம்மா தாயே அது
குத்து விளக்கென்னுந் தீபத்தை யேற்று நீ மகளே.

51. தீபத்தை ஏற்றத் திரியேது நெய்யேது தாயே அது
திரியது மூச்சும்பின் நெய்யது றூஹாகும் மகளே.

52. றாகென்று லெத்தனை யுடலுக்குள் விள்ளம்மா தாயே அது
றாகென்று லைந்துண்டுங் குத்தூஸ் தலமையாம் மகளே

53. குத்தூசி தலமேது மற்றுள்ள றாகெங்கே தாயே அது
குத்தூசி மேலும்பின் மற்றது கீழாகும் மகளே

54. கீழது மேலாக வந்த சபபென்ன தாயே அது
கேளதை ஒத்தினி சூறத்தைப்பாரு மென் மகளே

55. சகல கலையும் பொருந்து மொளியேது தாயே அது
யாஹூவதாகும் நிலையறிந் தோதுநீ மகளே

56. பிஸ்மில்லா வென்றதின் ஹேஎழுத் தேதம்மா தாயே அது
விபரஞ் ஜலாலுஞ் ஜமாலுங் கமாலுமா மகளே

57. குன்னென்ற சத்தம் பிறந்தது எவ்விடம் தாயே அது
குன்னென்ற நாட்டம் அஹதிய்யத் தாகு மென் மகளே

58. அஹதியத் தொஹத்தது வொன்று யிருந்ததா தாயே அது
அகுயானு தாப்பித்தா கஞ்சுல் மகுபியா மகளே

59. கஞ்சுல் மகுபிஎன் றென்னத்தைச்சொல்லலாம் தாயே அது
காமக் கடலி விருந்தொரு முத்தாகும் மகளே

60. முத்து முகப்பினில் மோட்சமிருக்குதா தாயே அது
மோட்சத்தின் வீடாகு முச்சுட ராமது மகளே

61. முச்சுட ரெந்த நிறமாகுஞ் சொல்லம்மா தாயே அது
முச்சுடர் பச்சையும் வெள்ளையும் நீலமாம் மகளே

62. நீலக் கறுப்புக்குள் கூத்தாடி யாரம்மா தாயே அது
நீடொளி யாகிய கூத்தனும் சித்தனும் மகளே

63. சித்தனுங் கூத்தனும் யாராகுஞ் சொல்லம்மா தாயே அது
சித்தனுங் கூத்தனும் தாத்தும் சிபாத்தாகும் மகளே

64. பிஸ்மிபி லற்றகு மானதின் பொருளென்ன தாயே அது
விரிவாக எல்லார்க்கு மொத்தக் கிருபையாம் மகளே

65. நிகழ்த்தும் பிஸ்மிபி னிற்றஹீ மேதாகும் தாயே அது
நீதமுடையோர்க்குச் சொந்தக் கிருபையாம் மகளே.

66. இந்தத் திரவியம் எங்கே யிருந்தது தாயே அது
செய்யிது முகம்மதின் சிந்தையிலுள்ளதாம் மகளே.

பிஸ்மிப் பாட்டு முற்றிற்று

## கப்பற் சிந்து.

### பல்லவி.

லாயிலாக இல்லல்லாஹூ—இல்லல்லா
முகம்மதுற் றசூலுல்லாஹி—சூலுல்லா

(1) ஆசைகடற் பொங்கி நின்று இல்லல்லா அதில்
அலிபுலாமீம் மொழி திரண்டு இல்லல்லா
ஓசையது வலம்புரியாம் இல்லல்லா அனுதினம்
ஓடுங்கப்பல் முகம்மதிய்யா இல்லல்லா

பெரிதான நாசூத்திற் பிரதானக்கப்பல்
பாவீடு ஜெம்ஹூத்து திருவாசல் நோக்கி
அரிதான வேதமது புறுக்கானும் இஞ்சீல்
அதுவான சரக்கெல்லாம் பொதுவாக ஏற்றி
நெறியான ஹக்குடைய தூது ஜீபுரீலும்
நேராக மலக்கூத்தில் கும்பாசைவைத்து
குறிப்பான தானமது காபக்கபுசைனி
குல்ஹூவல்லாஹூ வெண்டோடுதுபார்கப்பல் (லா)

(2) அஞ்செழுத்துப் பஞ்சவர்ணம் இல்லல்லா அதுமே
லவதார மொன்றுடுதுபார் இல்லல்லா
பிஞ்செழுத்துப் பளபளென இல்லல்லா உருவம்
பிசகாமல்நின் றசையுதுபார் இல்லல்லா

முத்து முகப்பினில் முச்சந்திவாசல்
முதலோன் முகம்மது மீக்காயிலங்கே
பத்தும் விளக்கொண்டு சைத்தூன் மரத்தில்
பத்தாஹின் கப்பற் கொடியும் பறக்க
சித்து கலிமா முத்து சித்ரக்கண்ணுடி
செங்கமலரவி மதியும் நின்று விளையாடும்
மத்தியில் மணிமுத்துத் தொட்டில் நடுவே
மன்றுடு முகிய்யித்தீன் நின்றுடுதையா (லா)

(3) வல்லோன் திருத்தூதர் நபி இல்லல்லா கப்பல்
வலமு மிட மிருவருண்டும் இல்லல்லா
கல்லுருகுங் கதிர்மதிபோல் இல்லல்லா கிறுமன்
காத்திபீ னென் றெழுதுமவர் இல்லல்லா

கப்பற் சரக்கின் விலாசம் முடித்து
கணக்கொன்றுந் தவறுமற் கறகறென்றெழுதி
தப்பாமற் சரக்கது முற்றாகயேற்றி
தனியோனின் திருச்சமுகம் கையொப்பம் வைத்தி
செப்பரிது செங்கமலத் துள்ளொளிவுவங்கம்
சங்கையொளிவங்கமது தங்கவடிவாகும்
முப்பொருளுமுத்து பவளத்துடனே பச்சை
முச்சுடரு மச்சுடாரா யோடுதெடா கப்பல் (லா)

(4) ஐந்தறையில் ஐவருண்டும் இல்லல்லா அதில்
ஐந்துபேரு மதிகாரராம் இல்லல்லா
ஐயைந்திருபத்துமைந்து இல்லல்லா அந்த
ஐவருக்கும் காதீம்களாம் இல்லல்லா
சூட்சத்திலின்ஜீனே யில்லென்றுதட்டிச்
சூறுய்த்துருத்தியிற் காற்றையுமேற்றி
மோட்சத்தின்சுக்கானே வாகாய்ப்பிடித்து
மேலான லாஹூத்தில் நினைவைக்கொளுத்தி
தீட்சை பெறும் செய்குடைய யாதனைப்பூட்டி
தீன்தீன் முகிய்யித்தீன் கொடியை யிழுத்து
காட்சிதரும் ஹக்குடைய தீதாரைக்காணும்
காபுஹாயாஜின் சாதெனுங்கப்பல் (லா)

(5) முச்சுடரு மோரலிபாய் இல்லல்லா அந்த
முத்துமணி மண்டபத்தில் இல்லல்லா
பச்சைக்கொடி பவளக்கொடி இல்லல்லா அது
பறக்குங்கொலு மேடையினில் இல்லல்லா
அந்தரக் கொலுமேடில் ஆதமும் ஹவ்வா
ஹாமீ முகம்மது அலிபாத்திம்மாவுஞ்
சந்திர சூரிய ஹசன் ஹுசைனரும்
சேகப்துல் காதிறு முகிய்யிதீன் கூட
பந்தமதுபோல பரி சுத்தபெரியோர்கள்
பாருலகில் பவ்சுபெறு கப்பலதிகாரர்
சொந்தமுடனிச் சபைகூட்ட மொருமேட்டின்
சிந்தை பெறுமதி சயம் சொல்ல வரிதப்பா. (லா)

(6) நாருத்தின் கீழ்க்காம்பறையாம் இல்லல்லா அந்த
நபுசம்மாறு வீடதுவாம் இல்லல்லா
ஆசை பாசை மாய்கைதுன்யா இல்லல்லா செய்த்தான்
பாசவலை ஆசனமாம் இல்லல்லா

கள்ளன் திருடனும் செய்தானு மக்கள்
கல்புக்குள் ஈமா னைக்களவாண வருவார்
உள்ளத்திற் குருவுற்ற சரமருங்தெல்லா
மொன்றாகக் குருநாடி பீரங்கியிட்டு
விள்ளத்தொலையாத திக்றெனுங்குண்டை
விஸ்தாரமாக அதி னுள்ளத்திலாக்கி
கள்ளத்திரியதை ஹூம்மென்று கொழுத்தக்
கள்ளன் அம்மாறுவும் ஓடபடா செய்த்தான். (லா)

(7) முதலாவது நாருத்துவாம் இல்லல்லா அந்த
மண்ணீரலில் ஜிபுரியீலாம் இல்லல்லா
நிதநிதமும் ஹக்கில் நின்றும் இல்லல்லா வஹி
நேரவரப் பார்ப்பவராம் இல்லல்லா

ரெண்டாம் மலக்கூத்து பார்வையின் வீடு
ரகசியமீக்காயி லதிபதியாகும்
மூன்றும் ஜெபறூத்துக்காற்றதின்வீடு
மன்னவன் மீக்காயி லரசதுவாகும்
அண்டாதிலாஹூத்து நாலாவதான
அக்கினியாம்வீடு காலனதிபதியாம்
அண்டமதுவானஐந் தாவதொருவீடு
ஹாஹூத்து ஆகாசம் அரசர் முகம்மத் (லா)

(8) ஆறுவது பாஹூத்துவாம் இல்லல்லா அதில்
அம்ருயிலு மதிகாரராம் இல்லல்லா
நூறுனிய்யத் தானகப்பல் இல்லல்லா தலம்
கோக்குங்காப கபுசைனியாம் இல்லல்லா

ஆனதலமானதிலே கப்பல் நிறுத்தி
ஆசிக்கும் மகுஷுக்கும் வந்து விளையாட
கோனவன் கோதையர்கள் ராகம்படிக்க

கூசாமல் தாசியர்கைத் தாளங்கள் தட்ட
கானமயில் கூவுகுரல் ஓசையது கேட்க
கப்பலதினுள் மறைவில் வள்ளல் முகியிதீன்
காணாத காட்சி களைக்கண்டு மனமகிழ
கப்பல் அலங்கிர்தங் காணலாங்கண்ணால் (லா)

(9) ஏழாவது ஜெம்ஹூஷத்துவாம் இல்லல்லா அதி
விருக்கும் சுல்தான்குத்தூசியாம் இல்லல்லா
ஆழக்கடலோசையது இல்லல்லா ஹாஹீ
யாஹூஹூ-ம்மென்றோசையதாம் இல்லல்லா

காணிக்கைத்தானம் மக்காமன்மஹூ மூத்
காட்சியாம் குத்தூஸ் சுல்த்தா நசீரு
மாணிக்க முத்துப்பொன் பச்சைபவளம்
மங்காதயாக்கூத்து நவரெத்தினமேடை
ஆணிப்பொன் அம்பா மாசனமீதில்
ஆதிவெஞ்சாமரை வீசுவதுபாரும்
ஏணியதுமின்பர் கொத் பாவு மிஹ்ரூபு
இலங்கும்ஆசா அம்பு வில்லென்ற விடாம் (லா)

(10) காட்சியில்லீன் நடுமத்தியாம் இல்லல்லா கப்பற்
கரை சேருமோர் துறைமுகமாம் இல்லல்லா
மோட்சத்துறை தவறவிட்டால் இல்லல்லா கடைசி
மோசத்துறை பாதாளமாம் இல்லல்லா

சூறாதுஞ்சக்ருத்திற் புசல்வந்தடிக்கச்
சூரியசந்திரப் பிரகாசமங்கே
ஆறுதாரந்தாண்டிக் கப்பல் நெருங்க
அனியாய செய்த்தானை யப்பாலெறிந்து
பீரானபீர் அப்துல்காதிறு பொருட்டாற்
பிருதவ்சி லஉலாவி லனுதினமிருந்து
யாறப்பு உன்னுடைய தீதாறைக்காண
யாஹாதி செய்யித் முகம்மதுக் கருள்வாய் (லா)

கப்பற் சிந்து முற்றிற்று.

## ஞான ஆநந்தக்களிப்பு.

பல்லவி—தரு

நினைவுக்குள்நின்றுடு மயிலே யெங்கள்
நெற்றியின் மத்தியில் முத்தாகுங் குயிலே.

சரணங்கள்.

மட்டுக்கடங்காத மானே திரு மவுனத்திசையில்வந் தூறிடுஞ்ஞான
விட்டுப்பிரியாப் பிரானே குரு வட்டத்தில்வந்து விளையாடுந்தேனே
எட்டும்பின்னுலதுவான வொரு யெட்டாம லெட்டுங்கனியிதுதானே
கட்டக்கயிறது தானே காலைக் கட்டாமற்கட்டவருள்புரிவானே (நினை)

பாலத்தடிமூலத்தாளே-நல்ல-பத்தினிசித்தர்க்கிரங்கிடுவாளே
கீழக்கரை யிருப்பாளே-திரை-கீறிக்கிழித்தேறி மேல்வருவாளே
கோலங்குறிப்புடையாளே-யவள்-கோபுரவாயற் றிறந்திடுவாளே
நாளுக்குநாளழகாளே-அந்த நாதாக்கட்கெல்லா மருள்புரிவாளே. (நி)

வட்டமுகத்துடையாளே-உன்னை விட்டாலொரு கெதியுண்டோமோநாளை
தொட்டிலிலாடிருப்பாளே - அவளைத் தொட்டோரைத் தொட்டாற் தூய்தாக்குவாளே [ளே
எட்டியேபார்த்திருப்பாளே-யாரு மெட்டியேபார்த்தாற் றலையிழுப்பா
பொட்டிட்டுமையிடுவாளே-பாடு-பட்டோர்க்குப் பாலைப்புகட்டிடுவாளே. (நி)

கண்மணிமாணிக்கக்கண்ணே-யுன்னை-காணுமல் வாணுளை வீணுக்கி முன்னே
பன்னிருகால் விழிப்பெண்ணே-யுன்னை-பாங்காகதூங்கி யான்பக்குவம்பண்ண
கண்டேன் கனவை யானுன்னை - கண்டேன் கண்டத்தின்மேலே கருத் தாக வெண்ண
வுன்னியான் சிந்தையிலுன்ன-ஒரு குத்து நக்கத்துக் குருவடிவாளே.

தலைகீழுங்கால்மேலாய் நின்ற நல்ல தலம் காபகபுசைன் தருத்ததிற் சென்ற
ஜல்லிப்பிரகாசத்தைப்பூண்ட ஜமா லோடுகமானுமை யொன்றாய்த் திரண்ட
கலிவுடன் மாவாகநின்ற எகின் காணும்சுரூபவிளக்கேற்றி நின்ற
மூலக்கொலுவிலுறைந்த வந்த முக்கோணச் சக்கரத்துள்விளக்காளே. (நி)

ஆதாா மாறு யுறைந்து-அந்த-அக்கினிவாய்வுக் காசாகவந்து
மாதாபிதாவும் பின்சேர்ந்து அது ஹாவென்றும் ஹீயென்றும் ஹூ வென்றும் பாய்ந்து
பூதமதனைதந்தானவிந்து - நல்ல-பொக்கிஷதாத்துஞ்சிபாத்தாய் வளர்ந்து
நாதக்கருவாய்த் தெளிந்து-கோலம்-நன்றுனதூண்டாமணிவிளக்காளே. (நி)

சங்கீத ராகம்படிக்க-நல்ல-சந்ததக்கைமணியோசை கலிக்க [க்க
இங்கிர்தமேளந் தொனிக்க-வீணைக் கம்பியில் ஹறு வைத்திரட்டியிழு
சங்குசாத்தைப்பிடிக்க பின்னர் அங்கக்கடலினில் வங்கம்பிறக்க
முண்டகச்சூட்சம் திறக்க-நல்ல-முத்திவலம்புரிப் பத்தினியாளே. (நி)
பெட்டிக்குட் பொக்கிஷப்பொருளே - யுன்னை - கிட்டாமற் றட்டழி
வாகுவதிருளே

யெட்டும் பின்நாலுக்கு ளருளே-எமன்-எட்டியே பார்த்தாக்காற் றிட்
டந்தான் மருளே

விட்டுப்பிரியுங்கண் பிரள-வாசி விட்டால்வரும்நோய் மஜ்லீஸ்விரள
பட்டணத்தில்லாப் பொருளே-பாடு பட்டோர்க்குப் பாலைப் புகட்டிடுவாளே
(நினை)

தாத்துல் முகம்மதியவளாம்-நம்மள்- திக்றுகபிய்யிலுரு வாகுமெவளாம்
பாத்திஹுடன் ளாகி றவளாம் மீள வெகுசிபாத்தாகி விழைந்ததுமிவளாம்
காத்துக்கரசியானவளாம்-கடைசி-காலனைக் காலாலுதைத்திடுமிவளாம்
பீத்தலை மூடுவதெவளாம்-அவளைப்-பார்த்துநாங் காத்துப்பதறவைத்
தாளே. (நினை)

கண்ணே கருவேமணியே-பசும்-பொன்னே பொருளே யென்னுயிரதுநீயே
அன்னப்புருவது நீயே-யெனக்-காதாரமாதார மாதாரநீயே [நீயே
குன்னுக்குள் நின்றது நீயே- ஹறூவாய் - குன்பயக்கூனில் முடிந்தது
முன்னிருள் நூருரும் நீயே-பின்னு - முச்சுடர் வட்டத்தின் முப்
பொருளாளே. (நினை)

தச்சனில்லாதொருவீடு-அதின்-தகுத்தெனுஞ் சிங்காசனமானமேடு
வச்சிரமாமணிக்கூடு-அங்கே-வாலக் குருநந்தி யானந்தத்தோடு
உச்சிதமாக நீதேடு-பின்ன-ருச்சிக்குங்கீழே நீ கண்டுருப்போடு
அச்சனம்வாய்த்திடும்நாடு - அங்கே-யிருக்கு மனோன்மணி யருள்புரி
வாளே. (நினை)

அன்ன நடைச்சி நீயம்மா-உன்னைக்-காணமல் வாணளை வீணக்கிச்சும்மா
பன்னிருகால்விழியம்மா-பாதம்பணிந்தடிபணிய இருந்தன்யான்சும்மா
வென்னுக்குள் மின்னொளியம்மா - வென்னை யாட்டவு மோட்டவும்
வைத்தாயேயம்மா

தன்னையறிந்திரு சும்மா-தானே-தானவனக வருள் புரிவாளே. (நினை)
உந்திக் கிபுலாவையெட்டிப்-பின்-னிருதயக்கமலத்திற்றக்குபீரைக்கட்
சிந்தைப் பசாசை விரட்டி-மேலே-சங்குசகரில் புறக்கதைமாட்டி [டி
யொன்றுக்கு ளவரைக்கட்டிப்-பின்ன-ரொன்பது வாயலை யொன்றுகப்பூட்டி
பண்டுள்ள நீதத்தைக்காட்டி-பிங்கே-பரலோகப்பெண் வந்து நீதிசெய்
வாளே. (நினை)

ஆகத்துக் கெட்டாத சோதி யது ஆகாயச் சங்காகும் வாகாய்நீயூதி
வேகத்தி லறுகோண வீதி-தாண்டி-விட்டாலும் பாயாமற்கட்டுஞ்சமா
சாகுமுன்சாவது நீதி-யந்தச்-சுழிமுனைத்தாரையறிந்ததைப்போதி [தி
வேகத்திற் பார்த்தாடுந்தாதி-அவள்-வானத்தில்வந்து மதம் பொழி
வாளே. (நினை)

கமகமவாசப்பிரகாசே-உன்னைக் காத்துயான்பார்த்துயென்காதிலுன்னோசை
குமுகுமுவெனக் கேட்கவாசை - அது - ஹாவென்றும் கூவென்றும்
ஹீயென்றபாசை
கமலப் பொற்பாதப் பிரகாச-வந்து-கண்மத்தி மூக்கின் நடுச்சுழிவீச
சமுகத்திற் சார்ந்திடவாசை யென்றுஞ் செய்யிது முகம்மதுக் கருள்
புரிவாளே. (நினை)

ஞான ஆநந்தக்களிப்பு முற்றிற்று.

---

## தங்கப் பாட்டு.

ஆதிமுத லெவ்வுயிரு மவ்வொளிவி னின்றிலங்குஞ்
சோதி முகம்மதியா என் தங்கமே நீ
சூலா யிருந் தாயடி. 1

முன்னுக்கு முன்னொளிவாய் முச்சுடரு மோரலியாய்
தன்னுக்குள் தானாகியே என் தங்கமே நீ
தவசி லிருந்தாயடி. 2

முன்னழகும் பின்னழகாய் மூக்குத்தி முழுவைரம்
வன்னம்பல ஆபாணம் என் தங்கமே நீ
வாகா யணிந்தாயடி. 3

மங்காத மங்கையரின் மார்பு மாதுளங்கனியோ
சிங்கார ரவிக்கை பூட்டி என்தங்கமே நீ
சீராய் மறைந் தாயடி. 4

மெய்யூரிலேபிறந்து பையூரில் நீ வர்ளது
பொய்யூரில் வீற்றிருந்தாய் என் தங்கமே நீ
பாதாள மூலியடி. 5

வேடிக்கையாடுறாய் நீ பஞ்ச வர்ண மெத்தை மீதில்
பாடிக் கைத் தாளந்தட்டி என் தங்கமே நீ
பவுசுனக்கு மெத்தவடி. 6

எள்ளுக்கு ளெண்ணெயைப்போ லெங்கும் நிறைந்தவளே
உள்ளுக் குள்ளாயிருந்து என்தங்கமே நீ
யுட்கதவைப் பூட்டிக் கொண்டாய் 7

சீனா யொளித் திருந்து நூனாய்ச்சிறந்து யிந்த
தீனாக வந்தவளே என் தங்கமே யுன்
தீதாறைக் காதலித் தேன் 8

கோடி கோடி மானிடர்கள் கோதை யுனை நாடி யோடி
தேடித்தேடி மாண்டவர்கள் என்தங்கமே உனைத்
தேடித் திகைத்தாரடி 9

தஞ்சம் திக்று ஜல்வி கல்பியுடன் றூஹி யதை
பஞ்சவர்ணக் கிளிபோல் என்தங்கமே நீ
பாங்காய்ப் புறக்கிடுவாய் 10

ஹா வென்னு மாமரத்தில் ஹூவாய்ச்சமைந்த மயில்
ஹீயென்னு மக்கனியை என்தங்கமே நீ
கொத்தி விழுங்கிடுவாய் 11

மலக்கூத்து மாமலையில் மாடப்புறுவதாகி
இலந்த மரம் ஜம்கூத்திலே என்தங்கமே நீ
யேறி யிறங்கிடு வாய் 12

என்னைப்போல் மாப்பிள்ளைமார் எத்தனையோ வுனக்கு
உன்னைப்போற் பெண்ணெனக்கு என்தங்கமே நான்
ஊரிலெங்குங் காணேனடி 13

அங்கிருந் திங்குவந்து சங்குசூரிச் சக்கரத்துள்
திங்க ளொளி போலே எங்கும் என் தங்கமே நீ
தூண்டாமணி விளக்காம் 14

பெண்ணுக்கு ளாணாகி யாணுக்குட் பெண்ணாகி
கண்ணி னிடை நீ யிருந்தாய் என் தங்கமே யுன்
காரணத்தை யாரறிவார். 15

உற்றாரும் பெற்றாரு மூரா ரறியாமல்
மற்ற வொரு சாமத்திலே என் தங்கமே
முஹப்பத் தனக்காமடி. 16

மருவினேரை யந்தநேரம் மடிமீதணைத்திருத்தி
பரிமளங்கள் பூசிடுவாய் என் தங்கமே நீ
பிரியாமல் முத்தமிட்டு. 17

ஆரு தாரங் கடந்து ஹாகூத்தைக்கண்டபேரை
நேராக வந்து நின்று என் தங்கமே நீ
நேர்வழியைக் காட்டிடுவாய். 18

அஞ்சி லொன்றை நெஞ்சதனில் அஞ்சியுணர்ந்த வர்க்கு
வஞ்சக மில்லாமலே என் தங்கமே நீ
வாயற்றிறந்திடுவாய். 19

அஞ்சுநிறச் செஞ்சுடரே அல்கம்துவானவளே
குஞ்சுக் குதிரையிலே என் தங்கமே நீ
குறையாய்ச் சவாரிசெய்வாய். 20

கோட்டைவாசலொன்பதையும் குறைபாதிழுத்தடைத்துக்
காற்றைப் பிடித்தவர்க்கு என் தங்கமேயுன்
காரணத்தைக் காட்டிடுவாய் 21

நித்திரை விரட்டிநன் னினைவுடனிருப்பவரைக்
கர்த்தனருள் பெற்றவரை என் தங்கமே நீ
கண்டு மகிழ்ந்தாயடி 22

முத்துமுகப்புக்குள்ளே முக்கோணச்சக்கரத்துள்
குத்துவிளக்காமடி என் தங்கமே
கொலுமேடை வாயலிலே. 23

பார்க்கப் பலவிதமாய் பஞ்சவர்ண மஞ்சதுவாய்
தீர்க்கமுட னறிந்தால் என் தங்கமே
திரையைத் திறந்திடுவாய். 24

கருவாகநின்றிலங்குங் கலிமாவினுட்பொருளை
யுருவாக்கும் பேர்களுடன் என் தங்கமே
யறிவுனக்கு மெத்தவடி. 25

கமலத்துக்குள் ளிருந்து கைகாட்டும் பெண்ணரசே
சமுகத்திற் சார்ந்தவரை என் தங்கமே நீ
சங்கைமிகச் செய்வாயடி. 26

அஞ்செழுத்தின் பொருளது நீ யாசைகொள்ளகமியம் நீ
நெஞ்சுக்குள் நின்றிலங்கும் என்தங்கமே நீ
நிமைக்குள் மறைந்திடுவாய். 27

ஈரா றெழுத்ததுக்கு ளிருக்கு மந்த வுட்பொருளை
நூறுக்கும் பேர்களுக்கு என்தங்கமே நீ
நூறுயிருப்பாயடி. 28

ஆவிதனி னின்றிலங்கு மாணிமுத்து பொக்கிஷம் நீ
ஹூவிற் குடியிருந்து என்தங்கமே நீ
ஹூவாய்ச் சமைந்தாயடி 29

செய்யிது முகம்மதெந்தன் சிந்தையிற் சிறந்தகனி
கையெடுத்தணைத்துக் கட்டி என்தங்கமே யென்
கண்மணியைக் காத்தருள்வாய். 30

தங்கப்பாட்டு முற்றிற்று.

---

## ஞானச் சந்தக் கும்மி.

அஞ்செழுத்தான வுடலுக்குள்ளே ஒரு
அன்ன மிருக்குது மின்னொளிபோல்
பஞ்சவர்னக்கிளி போலது வாமது
பரமத்திரு நடுமத்தியி
லெரியுஞ்சுட ரொளியானது
பஞ்சபூதமெனும் செஞ்சுடராம் அது
நெஞ்சில் விளக்கொளியானதுவாம். 1

அண்ணல் மணியிற சூல்தமக்குப்பதி
னைந்தடையாளமதுண்டறிவாய்
என்னவிதமென்று சொல்வேன் அடையாளம்
இணனுமில்லை மணலிலடி
தோயாதவர் மேகங்கவிழ்
எங்கள் நபியின் சிரம் அறுசில் அவர்
சங்கைத்திருப்பாதம் தருத்தரு. 2

முன்கண்டபோல் பின்னுங் கண்டிடுவார் எங்கள்
முத்து முகம்மது வள்ளல்நபி
கண்மணியான கருணையுடையோரை

கடிபூக்க ளொருபோதிலும்
முடுகாதது நபிமீதினில்
கருணை முகம்மதின் காரணத்தை நல்ல
அருமையாய்ப்பார்த்து உணர்ந்திடுவீர். 3

இறையோன் நபிதிருப் பாதமது ரண்டை
இந்தப்புவிதனில் கண்டோரில்லை
அறவேசிரம் மேனி கண்டதில்லை எங்கள்
ஆலக்கரு கோலக்குரு
மூலப்பொரு ளாகுந்திரு
ஆதிநபியின் மலஞ்சலத்தை இந்த
மேதினியுள்ளோர்கள் கண்டதில்லை, 4

காரணக்கண்மணி தாஹாநபியவர்
கல்பொரு போதும் மறந்ததில்லை
பூரணமாகிய புறுகான் முகம்மது
புவிமீதினி லொருபோதினுந்
துகிலாடையைக் களையாதவர்
பொங்கும் சலவாத்தை யோதிடுவோ மொழி
தங்கும் நபிபேரி லென்னாளும். 5

உரோமம் நகங்கள் வளர்ந்ததில்லை அவ
ருரோமங் கழன்று விழுந்த தில்லை
நாமுமறிந்து சிறந்து உணர்ந்திட
நாதனருள் வேதப்பொருள்
பாதந்தரு தூதர்நபி
நாதர்ஷபா அத்து நங்கொடையா மெங்கும்
காதங் கமழ்வீசுங் கஸ்தூரியாம். 6

இந்தப்பதினைந் தடையாளத்தை நாங்கள்
எல்லோரும் நன்றாயறியவிதி
சிந்தைத் தெளிவருள் செய்யிது முகம்மதின்
சேருந்துயர் தீரும்மெனைக்
காரும் மஹ்மூதேதிரு
சேர்த்தென்னை ரெட்சித்துக் காத்திடுவீர் வினை
தீர்த்துமனக் கண்ணுற் பார்த்திடுவீர்.

ஞானச் சந்தக் கும்மி முற்றிற்று.

## ஞானக் கும்மி

ஆசைக்கடல் பொங்கி விந்தாகி அந்த ஆசிக்கு மஹாசுக்குத் தானுகி
லாசக்க யுருவாகி வெளியாகி ஹாஹா லாத்தன்சா ஹாவை நீ என்பிறவி 1

முச்சுடரானது மச்சுடராம் வெள்ளை முத்தொடுபச்சை பவளமுமாம்
மெய்ச்சுடரானதைக் கண்டுதெளிந்து நீ மேவிதியானஞ்செய் என்பிறவி 2

மூலமுக்கோணத்தின் வாயலிலே-யொரு முத்தி மனோன்மணி நித்தி
ரையாம்
காலைப்பிடித்திவள் மெள்ளவிருத்திநீ கண்டு விளையாடு என்பிறவி. 3

அத்தினி சித்தினி பத்தினியாம்-நல்ல-ஆவர்ண மாலையணிந்தவளாம்
முத்திச்சுழிமுனை மண்டபத்துள்-அந்த மூத்தாளிருக்கிறுளென்பிறவி

நாசுத்தில் நின்று மலக்கூத்திற்-பின்பு-நாடுஞ் ஜெபறாத்து லாகூத்து
ஹாஹாத்துபாஹாத்துஜம்கூத்தி-லவள் ஹக்கைவணங்கிருளென்பிறவி

பொங்கும் உறாஜிநு சூலாளே-நல்ல-பூரணவட்ட முகத்தாளே
அங்கத்தி லானந்த மின்னுளே-அவள்-ஐம்பத்தோரட்சர மென்பிறவி.

கன்சல்மஃபி லிருந்தவளா-மென்றும்-காரணக் கண்மணியானவளாம்
குன்என்ற சொல்லிற் பிறந்தவளாம்-அவள்-கூத்தாடிப்பார்த்தாடுதென்பிறவி

குஞ்சிக் குதிரைமே லேறிடுவாள்-அந்த-கோபுரவாயல் திறந்திடுவாள்
ஊஞ்சலி லாடி விளையாடுவாள்-உஜூதுள்ளமையானவளாம் பிறவி. 8

உச்சியின்கீழ்ந்த ஊசிமுனைதனி லூமையனோடுறவாடிடுவாள்
மச்சுமேலேறி மறைந்திடுவா-ளந்த-மாமதிமாமணி யாம்பிறவி 9

வெட்டுக்குங் கட்டுக்கடங்காத-பரி-வெட்டவெளியினிற் பாயாம
லெட்டையும் நாலையும் கொண்டுகெட்டிப்பரிஎட்டிப்பிடித்துக்கொளென்பிறவி

வீணுகமூச்சினைக் கட்டாதே-யந்த-வீணரில் நின்றுற வாடாதே
வீணுகவாணுளைப் போக்காதே-யந்த-வீணரைத்தள்ளுநீ யென்பிறவி

வாசிக்குதிரை வசப்படுமோ-மேலும்-வானத்தின் வாயல் திறந்திடுமோ
ஊசிமுனைக்கப்பா லூசாடுங்காரண முள்ளமையாகுமா மென்பிறவி ()

எழுதாதலிபும்நுக் கத்தேது-கலி-மாவின்நிலையின் குருவேது
சுழியும்முனையும்வழியேது இதைச்சொன்னவர்காமிலா மென்பிறவி

மூலமுக்கோணமா முச்சுடரா மதில் மூங்கிப தாத்தது வோரலிபாம்
தூலத்திற்கண்டுஅறிந்தபெரியோரைத்தூக்கிச்சுமந்துக்கொளென்பிறவி

அஞ்சிலுதித்துப் பின்பிஞ்சாகி யதில் அஞ்சில்வளர் பிஞ்சுகாயாகி
நெஞ்சுதனில் வாழு மஞ்சினி லொன்றதை நேசித்து வாசஞ்செய் என்பிறவி

தாத்தின் சிபாத்தி னுவமையறிகடல் தாத்துக்குமிழி சிபாத்தாகும்
காற்றிற் குமிழிகரைந்து விட்டால்கட லல்லாதுவேறுண்டோ என்பிறவி

ஹக்குக்கும் கல்குக்கு முவமையறி தண்ணீர் ஹக்கும் சிபாத்துச் சிறந்தபனி
கல்குப் பனிய தளிந்த தென்றல்ஹக்கு வல்லாது வேறுண்டோ என்பிறவி.

தன்சீகு தஸ்பீகு அறியவேண்டும்-பின்பு-தன்சீகு மகுளை விளங்கவேண்டும்
சொந்த மக்அது சந்திப்புத்தானத்தில் சூட்சமிருக்குது என்பிறவி.

தன்சிகில் (லைசகமித்லிகி செய்) யென்றும் தஸ்பீகு (வலகுல்மதலதென்றும்)
சொந்த மஹளில் (மகுஅதுசிதுகு)என்றும்சொன்னான்குறு ஆனிலென்பிறவி

கடலாமை முட்டை கரைதனிலிட்டபின் கடலிலிறங்கித்தியானஞ்செய்து
உடனேதன்முட்டை பொரிக்குமுவமைபோலுள்ளில் தியானஞ்செய்என்பிற

ஆதாரமாறையுந் தாண்டிநீ சென்றபின் ஆருமறியாத தானத்திலே [வி
பாதாரங்கண்டு பணிந்த பெரியோர்கள் பாக்கியமுள்ளோராமென்பிறவி.

எள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்குநிறைந்தோனை ஏகாந்தமாகியநாயகனை
உள்ளுக்குட் காட்டித் தருகின்ற உஸ்தாவைத யுள்ளமை யென்றறி என்பிறவி.

முத்துண்டும் முத்துச்சலாபக் கடலிலே முங்கிக்குளியோடும்பேர்களவர்
முத்தியாம் முச்சுழி முச்சுடர் மவுனத்தில் மோட்சமடைவோராமென்பிறவி.

சினெனும் சிங்காரக்கண்ணாடிக்குள்ளுரு சீனிலமைந்ததோர் ரகசியத்தைச்
சினத்திலாகுதல் போயறியென்றசொல் செப்பினார்நாயகமென்பிறவி 24

ஆலக் கருவான கோலக்குருவிது யாரறிவார் இந்தப்பாருலகில்
பாலங்கடப்பவர் பாக்கியமுள்ளவர் பாவிக்குதவாது என்பிறவி 25

சிங்காரக் கம்பத்துள் சிங்கியும் சிங்கனும் சீராட்டும்நீராட்டும்பாராட்டும்
சிங்கியைக்காட்டு முறஷிதவர்களைச் சிந்தையிலெண்ணிக்கொளென்பிறவி 26

முத்துமுகப்பினில் முச்சந்திவீதியில் முச்சுடர்வட்டக்கண்ணாடியதுள்
குத்துவிளக்குண்டு கூத்தனும் சித்தனும் கூத்தாடுவாரங்கேயென்பிறவி 27

தோல்கூட்டுக்குள்ளே யிருக்கின்ற சூட்சத்தைதோசியறிவானோஇவ்வுடலில்
மேல்வீட்டைத் தாண்டிய மெஞ்ஞானியானோர்க்கு மேலோன்பதவி
யாம் என்பிறவி. 28

மவுத்துவரும்போது மற்றொன்றுதவாது மன்னோன்லிகாவது மத்தியிலே
பவுத்தாகிப் போகுமுன் தௌபாவின்பத்தியம் பத்திரமாயிரு யென்பிறவி.

காசுகாசென்று கடைசியிற் சாகின்றகழுதைகளுக்குயாமென்னசொல்வேன்
நாசிறனிவிட்டு நாசமாய்ப்போகுமுன் நாயனிற்சார்ந்துகொ ளென்பிறவி.

வேட்டை யிபுலீஸ் வெறிநாயாம் அம்மாறு வெட்டவெளித்துனியாவிற்சிக்கி
கோட்டைபிடித்துக் கொடியை இழுத்துக் கெடுதியி லாக்குவா னென்பிறவி.

சதியனிபுலி சின்சதியிலகப்பட்டுச் சதிமோசம் போகாமற் சடுதியிலே
மதுரமதுபோல் மதிக் கலிமாவை மனதிற்றியானஞ் செய்யென்பிறவி 32

முற்றியது கும்மி முத்துவைரம்போல் முற்றாக மூன்றூலின் சொற்படியே
உற்றவன் செய்யிது முகம்மதுரைத்தசொல் உள்ளமையென்றறிவாய் பிறவி.

ஞானக்கும்மி முற்றிற்று.

---

## ஆனந்தக்களிப்பு

லாத் தன்சா திக்றை நீ மனமே கல்பில்
லாமவுஜூது தில்லல்லா வென்றோது தினமே லா 1

முன்னுக்கு முன்னுருவாகி ஒரு முத்தாகி வித்தாகி முப்பொருளாகி
தன்னுக்குள் தானுசையாகி அந்தத்
திருமூலக் குருவே நீ தொழுதுகொள் தினமே. லாத்தன்சா 2

எங்கும் நிறைந்துஜலாலாய் அவன் என்னுக்குள்வந்து உறைந்துஜமாலாய்
அங்கப்பிரகாசக் கமாலாய் அந்த
அருளின்மேல் யாதாயிருந்து கொள் தினமே. லாத்தன்சா 3

மூலக்கலிமா முழங்க அந்த முச்சுடர்வட்டப் பிரகாசம் துலங்க
காலனும் வந்து நடுங்க வெகு
காட்சியை உன்னுக்குள் கண்டுகொள் தினமே. லாத்தன்சா 4

உச்சியின்கீழே யுலாவி நல்ல வுச்சிதமாகப் பறந்துடன் கூவி
முச்சந்தி வாசலில் மேவி அந்த
மோனப் புறுவைநீ கண்டுகொள் தினமே. லாத்தன்சா 5

பூவில்லாப் பூத்த கமல மதிற் பூரண வண்டு அமுதுண்ணுங் காலம்
சாவுமுன் செத்திடும் தூலம் நல்ல
சரியானபீரில் நின்றறிந்து கொள் தினமே. லாத்தன்சா 6

அந்தி பகலற்ற வீதி (யதி) லைம்பத்தோரட்சரமாகிய சோதி
சந்திரவட்டக் கண்ணடிக் குள்ள
ஜெக ஜோதிப் பெண்ணை நீ கண்டு கொள் தினமே. லாத்தன்சா 7

நாரூத்தைக் கண்டு பிடிக்கப் பின்பு நாதத்தினக்கினிவாயல்திறக்க
நாசத்தைச் சுட்டுக் கரிக்க குரு
நாட்டும் பொருளைநீ யாட்டிக்கொள் தினமே, லாத்தன்சா 8

ஒன்றுக்குதவாதகோட்டை சீவ வண்டுப்பிராணிக் ககப்பட்டவேட்டை
பெண்டு பிள்ளை மனச்சோட்டை யிது
பொய்யான வாழ்வென் றறிந்துகொள் தினமே. லாத்தன்சா 9

மாசற்றபீரிடஞ்சென்று ஜெயமவுனத்தின் முச்சுடர்பெண்ணை நீகண்டு
நாசிக்கு மேலாசை பூண்டு இரு
நயமணிக் கொழுந்தை நீ யறிந்துகொள் தினமே. லாத்தன்சா 10

தேடக்கிடையாதசெல்வ முன்னிற்றேடிநீ கண்டிடில்போய்விடும்பாவம்
மூடர்க்குச் சொன்னாலுங் கோபம் அந்த
மோட்சத்தின் வஸ்துவைக் கண்டுகொள் தினமே. லாத்தன்சா 11

மேலைத்தெருவில் விலாசம்அங்கே மேவும்புகையில் நின்றாடுஞ்சுவாசம்
மேலான ஜம்கூடத்தில் வாசம் அந்த
மவுனச்சிற்றாங்கத்தை நாடிக்கொள் தினமே லாத்தன்சா 12

அஞ்செழுத்தாலொரு பூதம் (அது) அன்பான நடனம்புரிகின்ற நாதம்
பஞ்சாட்சரமென்ற வேத மதை
பற்றிப்பிடித்துக்கொள் நினைவினில் தினமே. லாத்தன்சா 13

காலில்லா கெட்டைய னிற்க யிரு கையில்லாக் கட்டையனின்றுபிடிக்க
வாயில்லா வூமையன்பேச வகை
வகையான வேடிக்கை கண்டுகொள் தினமே. லாத்தன்சா 14

பட்டதுங் காதற்றவூசி யது பலபல நினைவாகு மனப்பேய்பசாசு
விட்டுத் துரத்தி நீ வீசி நல்ல
வெற்றிச் சரத்தை யுணர்ந்துகொள் தினமே. லாத்தன்சா 15

கண்டத்தின் மேலேநிதானமொரு காட்சிநுக்கத்து சுகூணுருந்தானம்
கண்டு தெளிந்தாற் சுவனம் அந்தக்
காட்சி விளக்கை நீ கண்டு கொள் தினமே. லாத்தன்சா 16

எண்சா ணுயரத்திற் றேடி ஒரு ஏகாந்த முச்சந்தி மதுவை நீநாடி
தஞ்சாவூர் ராஜன்முன் கூடி மதுவைத்
தானா யிறக்கிக் குடித்துக்கொள் தினமே. லாத்தன்சா 17

மூலப்பிராணனைக் கண்டு பின்பு முச்சந்தி ஜம்ஹூத்து மண்டபம் தாண்டி
பாலங்கடந்து நீ சென்று அந்தப்
பரலோகப் பாலை நீயுண்டு கொள் தினமே. லாத்தன்சா 18

சரியான குருவில்லா வித்தை முழுதும்
சதையில்லா யெலும்பைப்போ லறிந்திடும் விதத்தைச் [கொள்தினமே
சரியானகுருபரம்பொருளேயுக்தன் சரத்தினிற்கருத்தைநீ பொருத்திக்
மூச்செல்லாம் போகும் பனுவாய் கடைசி மோசத்துறையி லகப்படும்
காசுபணந் தேடிப்போனுய் கபுசே [வீணுய்
பகுவ ஷதிதுல் இகாபெண்டான் தினமே. லாத்தன்சா 20
வேட்டை பெரிதென் றெண்ணுதே-அந்த
வெறிநாயைக்கொண்டு நீ காட்டில் போகாதே [டாடு தினமே
கூட்டத்தில்யானைதவிடாதே குரு நங்கொடைப் பொருளேநீகொண்
உச்சியில் மாணிக்கக் கட்டி அதை யூரெங்கும் தேடித் திரிகின்றமட்டி
முச்சுடர் வட்டத்தி லெட்டிப் பார்த்து
மூலத்தின் தியை நீ மூட்டிக்கொள் தினமே. லாத்தன்சா 22
தண்ணீர் தலேயிற்சுமந்து-எங்குந்-தவித்து ஜலந்தனேத்தேடித் திரிந்து
தன்னே மறந்து மகிழ்ந்து கெட்ட
தப்பிலிக்கூட்டத்தை விட்டிடு தினமே. லாத்தன்சா 23
அறுபத்தா றட்சரச்சோதி-அதை-யறிந்து நீயுன்னுக்கு ஞதாமனூதி
இருநூற்றுப் பதினுவில் நீதி அறிந்து
இரவும் பகலு முருவாக்கு தினமே. லாத்தன்சா 24
துன்யா ஹவாவொடு பூண்டு-வெகு துன்பமதென்ற பலேறினிலாண்டு
அனியாய ளாலிமாய்த் தாண்டு இந்த
அடிமைக்கிரங்கிடு யாறப்பு தினமே. லாத்தன்சா 25
தெருவெங்கும் குருமார்கள் திரிவார்-அந்த-திருவடிமாவடி குருவடி
திருடர்முன் குருடர்கள் படுவார் அவர் [யறியார்
தீங்கை நீவிட்டு விரண்டோடு தினமே. லாத்தன்சா 26
பகல் வேஷம்போட்டவர் வருவார்-இந்தப்-பாரில்படாசெய்குவம்பிச
புகழ்வீச நசீகத்துச் செய்வார் அவர்முன் [மென்பார்
போகாதே முடுகாதே பாராதே தினமே. லாத்தன்சா 27
பெருமைக்கு மாவையிடித்துப்-பெற்ற-பிள்ளேகள் வாய்களில் மண்
சுரியதிற் காலேப் புதைத்து யிழுக்கச் [ணள்ளிவைத்து
சுரியது பிடிக்கும் போலலேகுவாய் தினமே. லாத்தன்சா 28

கலிமா நிலையைத்தெரிந்து-கமலக்-கண்ணுடிப்பூட்டுந் திறப்பு மறிந்து
அலிசொன்ன ரகசிய முணர்ந்து இந்த
ஆலத்திற்காமி லைத்துயர்ந்துகொள் தினமே. லாத்தன்சா 29

செய்யிது முகம்மது சொல்லை-யுந்தன்-சிந்தையி லெண்ணுவிட்டாலது
பொய்யென்றால் சுடுகாடு கொல்லை நல்ல [தொல்லை
பேரின்ப முத்தியைப் பெற்றுக்கொள் தினமே. லாத்தன்சா 30

சாவில்லா யாறஹ்மானே-இந்த-செய்யிது முகம்மது பையலைத்தானே
பாவிபிழை பொறுப்பேனே நல்ல
பாதையைத் தந்தருள் பாத்திபா தினமே. லாத்தன்சா 31

ஆனந்தக்களிப்பு முற்றிற்று.

---

## சிந்து மெட்டு

ஆசியா ஆப்பிரிக்கா லண்டன் என்ற மெட்டு

கண்ணிகள்

என்னை எனக்கறியாம லுன்னைமிக நான் மறந்தால்
என்னி லிரங்கிடுவோர் யாரையா எங்கள்
யா கௌதே தஸ்த கீரே நீரையா. 1

காத்து யானுங் காதலித்து பார்த்து உங்கள் பாதமலர்
கதறிப் பதறினேனுன்காணவும் அதை
நேத்திர மிடை நடுவில் தோணவும். 2

மங்காமணிவிளக்கே சிங்கா சிகாமணியே
மவுனமணிமண்டபத்திற் சேருமே என்னை
பங்கப் படுத் திடாமற் காருமே. 3

இரவு பகல் அற்றிடத்தில் திறவுகோலப் பேரொளியை
இருவினை யகற்று மெங்கள் நாதரே என்னி
லொரு பொருளைத் தந்தருளும் நீதரே. 4

இரு மீம்முகம்மதில் நின் றொருமீம் முகிய்யிதீனு
மிறையோனுகந்த வொலிப்பட்டமே உமக்கே
யென்றுன் முகிய்யித்தீனில் திட்டமே. 5

மற்றமீமை முன்னிறுத்தித் கத்தோனுகந்து சொன்னன்
மணியே யுமக்கு நபிப்பட்டமே தந்தேன்
முத்திரை யுமக்குப் பரிவட்டமே. 6

யாமுஞுதீ யாமுஞுதீ யாசனதீ யாசெய்யிதீ
யாமததீ யாமுகிய்யித் தீனி நூறி
அஹ்யி கல்பீ அந்தத்து ஹிய்யித்தீனி. 7

சீனதிற் சிற்றுயிருந்த நூனதில் நூறுகிவந்த
சிந்தையில்தெளிவு தரும் வீரர் எங்கள்
சிங்கப் புலியலியின் பேரர். 8

ஆதி றப்புகந்த நாதர் நீதியாய் நிறைந்த நீதர்.
அந்தரக்கிந் தீனூறஹ் மானீ ஆதி
சோதி மஹ்பூபு சுபு ஹானி. 9

உந்தி வனத்திருக்கும் நந்தீ மணிப்புறுவு
முச்சியின் மலேயில் வந்து மேயுமே அந்த
நந்தியானந் தத்தை யென்னி லீயுமே. 10

அந்தரத்தி லேறுமந்தச் சுந்தரமணிப் புறுவை
யந்தரத்தின் மந்திரத்தில் தோணுமே நந்தி
சந்திர சூரிய றொன்றுய்க் காணுமே. 11

வாசிக் குதிரையேறி நாசிநுனியில் மாறி
வானத்தின் வாசலேத் திறந் தாளுமே என்னே
யாளு மந்தத்திறவு கோலேத் தாருமே. 12

முந்தி அலிபாயிருந்து பிந்தி நுகத்தாகிவந்த
முத்தாயுதித் தசதுறஸ் ஸாதிரி முதலோன்
மீமாய்ச் சுழித்த அப்துல் காதிரி. 13

மாதா பிதா வெனக்குத் தாதா வுனேயல்லாது
மரணமதில் யாருமிலேத் தானே அந்தத்
தருணமதில் தந்தருள்செய் தீனே. 14

ஆதனமுன் நன்றியன்றி சாதனம் வேறுன்றுமில்லே
அல்லாவுகந்த அப்துல் காதிரி சுல்தான்
யாகௌதுல் அஃளம் கல்பில் ஹாளிரி. 15

நாயகா வெனதுயிரைத் தாயகா வெமன்பிடிக்கும்
நாளேயில் நயந்து முகம் பாருமே ஏழை
செய்யித் முகம்மத் துயர் தீருமே. 16

சிந்துகண்ணிகள் முற்றிற்று.

இந்த மடமங்கை யாரோ—என்ற சிந்தின் வர்ணமெட்டு.

கண்ணிகள்.

முன்னுக்கு முன்னுருவாகித்-திருவாகிக்-கருவாகி
அந்த முத்து மயில் வடிவாகி நம்மள்
அங்கமதிற் றங்கிடினும் பொங்கிடுமே கண்மணிபோல்
அந்தக் கருவொரு தீபம் அது
சொந்தப் பொருளான ரூபம்.

ஆகாய மாமது நாதம் பஞ்சபூதம் அருள் நீதம் எங்கும்
அஞ்செழுத்தாகிய வேதம் முன்னம்
ஆதியி லாதங் கூறு மோதிய வேதம் பாரும்
அல்ஹம்துலில்லாஹி மானே ஜய
வைம்பத்தோரட்சரந்தானே. 1

முச்சந்தி மத்தியாமேடு அதைத்தேடு குருவீடு எழு
மூச்சிவழி தனை நாடு சிந்தை
மாசியறு மூசிமுனை வாசலதை நேசமுடன்
முத்தியின் வாசலாங் காணும் அங்கே
சத்திய மாகவே தோணும். 2

பாரப்பா பாதை நாசூத்து மலக்கூத்து ஜெபறூத்து நல்ல
பகரும் லாகூத்து ஹாகூத்து ஏறும்
வாசிவழி ஜெம்கூத்து வாசமது தம்கூத்து
காயாபுரிக்கோட்டை மானே அது
மாயப் பெருவெளி தானே. 3

ஜடலத்தை நம்பாதே கேடு புழுக்கூடு சுடுகாடு அது
சண்டிக் குழுக்கறிமாடு நல்ல
மெய்தா நினைவை விட்டு சைத்தான் வலையிற்பட்டு
நாசக்கழுதையி லோடி வெகு
மோச மடைந்தவர் கோடி. 4

அஞ்செழுத்தா லொருதூல மனுக்கோல மதிமூல மொன்று
ஆகாச ரோமத்தின்பாலம் அந்த
முக்கமலக் குருவருளாற் சக்கரநீ கண்டிடுவாய்
காட்சிகண் டானந்தம் பாடு உந்தன்
மோட்சமென் றாஞ்சலிலாடு. 5

கண்ணாடி வட்டப்பிரகாச மருள் நேசம் விசுவாசம் திரு
வாயிரத் தெட்டி தழ் வாசம் வீசும்
அஞ்சிநிறஞ் செஞ்சுடரைத் தஞ்சமெனக் கெஞ்சிடுவேன்
காணிக்கை மேடையிற் பாடு மெங்கள்
மாணிக்கத் தொட்டிலி லாடு. 6

அல்கம்து லில்லாகி ஆதி எனைச்சோதி யருள் நீதி இந்த
ஆலத்துக் கெல்லா மனுதி பாவி
செய்யது முகம்மதெனும் பையல்பிழை நீபொறுப்பாய்
நாளைக்கிரங்குவ தாரு இந்த
ஏழைமுகத்தைநீ பாரு. 7

சிந்து முற்றிற்று.

---

## முகிய்யித்தீன் ஆண்டகைபேரில் முனாஜாத்து

கண்ணிகள்.

யாவொலியே யாவொலியே எங்கள் சிகாமணியே
யாகவுதுல் அஃலம் என அல்லாபுகழ்ந்தொலியே. 1

எல்லா குதுபுகட்கும் ஏர்தலாய் வந்துதித்துப்
பொல்லாப் பொறி புலனைப் போக்குவிக்கும் யாவொலியே 2

ஆலம் படைக்குமுத லவ்வொளிவில் லுள்ளுறைந்த
கோலமாய் வந்துதித்த குதாவி னருள் யாவொலியே 3

சூட்சமாய் வந்திலங்கும் தூண்டாமணி விளக்கே
மோட்சத்திற் சேர்ப்பீரெனை முகிய்யித்தீன் யாவொலியே. 4

அகமதெனு மவ்வொளியை ஆசையுடனே தொழுது
அஹதிற் றெரிய வர வாக்கிவைப்பீர் யாவொலியே. 5

முத்திவழிகாட்டி யென்னை மோட்சமதிற் சேர்த்திடுவீர்
பத்தி மனஞ் சித்தியதாய்ப் பாரு மெனில் யாவொலியே. 6

நெற்றி நடு விலங்கும் நாய னமானிதத்தை
நித்தமதை யான்றுதிக்க நினைவருளும் யாவொலியே. 7

பேராசை என்னும் பெருமை முகத்துதிபை
வேரோடறப்பிடுங்கி வெற்றிதரும் யாவொலியே. 8

ஆசைக்கமலத்துள் ளதிகாரந்தான் நடத்தும்
மாசை யகற்றியெனுள் மகிமை தரும் யாவொலியே. 9

வாச காபகபுசைன் வடிவுதல மிடைநடுவில்
நேசமுட னைம்புலனை நிறுத்தவருள் யாவொலியே. 10

கமலத்தில் நின்றிலங்கும் கலிமாவி னுட்பொருளை
எமன் வந்தணுகுமுன்னே எனக்கருளும் யாவொலியே. 11

அம்மாரு பாசவலை யாசையெல்லாம் விட்டகற்றி
சும்மா விருக்கையிலே சுகூதருளும் யாவொலியே. 12

கானலை நீ ரென் றெண்ணிக் காதலித்தமான்போல
வாணாள் வீண்போச்சுதையோ வரிசைபெற்ற யாவொலியே. 13

அடியேனுனுங்கள் பதம் அநுதினமும் நாடிவந்தேன்
முடிவெனக்குத் தாருமையா முகிய்யித்தீன் யாவொலியே. 14

சக்ரூத் தமளியிலே சூறா தத் தூபானில்
சுக்கான் பிடிக்கவெனில் சுகந்தருவீர் யாவொலியே. 15

இபுலீசவன் வருவான் ஈமானுரிந் தெடுக்க
சுபுஹுல்ஹாதாக் கசையால் தூரத்து மெங்கள் யாவொலியே. 16

றூகுல் குத்தூசியிலே றூகு நாலுஞ் சேர்ந்திருக்க
ரூகத்தைத் தாருமென்னில் றஹ்மத் தெனும் யாவொலியே. 17

புலன்கள் தடுமாறுமுன் பொறிகலங்கு மத்துடனே
பலனதுங்கள் பையலிலே பார்த்தருளும் யாவொலியே. 18

இருமீம் முகம்மதில் நின் றொருமீம் முஹிய்யித்தீனே
சிறியேன் துஆவை கபூற் செய்தருளும் யாவொலியே. 19

செய்யித் முகம்ம தென்போன் செய்யும் பிழையகல
கையேந்திக் கெஞ்சுகிறேன் கருணையருள் யாவொலியே. 20

முகிய்யித்தீன் ஆண்டகைபேரில் முனாஜாத்து முற்றிற்று.

---

## இன்னிசை.

### தாலாட்டு

ஆராரோ ஆராரோ ஆறுமஞ்சிக் கப்பாலே
ஆராய்ந்ததின் பொருளை யறிந்துணர்ந்து நித்திரைசெய்

கண்ணிகள்

முத்திக் கலிமாவை மவுனத் தியானஞ் செய்து
நெத்தியின் மத்திதனில் நிலைநிறுத்தி நித்திரை செய் 1

உள்ளபடி நடக்க வுள்ளும் புற மொன்றாக
வுள்ளமையைக் கண்டறிய வுற்றுணர்ந்து நித்திரைசெய் 2

வேற்றுமை முகத்துதிகை வேரோடறப்பிடுங்கி
யேற்றிறக்க மென்னாளு மேற்றி யேற்றி நித்திரைசெய் 3

மக்கா முகம்மதுவை மனதிற் குறிப்பெடுத்து
முக்காலமு முணர்ந்து முத்தி பெற நித்திரைசெய் 4

கண்ணே கனியமுதே கண்ணிறைந்த கற்பகமே
பொன்னே யென் பொக்கிஷமே பொன்மகளே நித்திரைசெய் 5

முத்துமுகப்புக்குள்ளே முக்கோணச் சக்கரத்துள்
குத்து விளக்கேற்றிக் குறிப்பாக நித்திரைசெய் 6

பாராத பாக்கியமே பாலகரே கண்மணியே
தீராத் திரவியமே தேங்கனியே நித்திரைசெய் 7

ஆதார மாறை விட்டும் அப்புறமாம் தற்பரத்திற்
பாதார விந்தமதைப் பணிந்து மகள் நித்திரைசெய் 8

நாய னமானிதத்தை நாடிச் சுகூது செய்து
மாய னிபுலீசவன் மருட்டாமல் நித்திரைசெய் 9

கர்ப்பக்குவளறையில் கண்காது வாய் மூக்கு
உற்பவித்த நாயகனை யுற்றுணர்ந்து நித்திரைசெய் 10

முத்தா யுதித்த வள்ளல் முச்சுடர் முகம்மதிய்யா
குத்து நுகத்துக்குள் குறித்தே முத்தே நித்திரைசெய் 11

அஞ்செழுத்துப் பஞ்சவர்ணம் அஞ்செழுத்து அல்கம்து
அஞ்செழுத்திற் பிஞ்செழுத்தை யறிந்துணர்ந்து நித்திரைசெய் 12

நபுசேழில் திக்றேழை நடத்திப் பழக்கஞ்செய்து
நபுசின் நூறுனிப்பத்துத் தாபரத்தில் நித்திரைசெய் 13

ஊராரறியாம லுறவு முறை பாராமல்
ஆரம்பத் தொட்டிலிலே ஆடிப்பாடி. நித்திரைசெய் 14

சரத்திற் கொடு ஹூவைச் சறுகாமல் முப்பிரிவாய்
பாத்திற் கருத்தை வைத்துப் பாங்காக நித்திரைசெய் 15

தீனையுகந்திடுவாய் தீதாறைக் கண்டிடுவாய்
தீனைவெறுத்திடுவாய் தீபகமே நித்திரைசெய் 16

பஞ்சவர்ணத் தொட்டிலிலே மாணிக்கக்கட்டிலிலே
அஞ்செழுத்து மெத்தையிலே அருமை மகள் நித்திரைசெய் 17

கலிமா வுயிரெழுத்துக் காயிலா நற்கனியை
அலிமாமனு ருரை போ லதை யறிந்து நித்திரைசெய் 18

நித்திரை மவுத்தாகும் நினைவு ஹயாத் தாகும்
பத்திரமா யென்மகளே புத்தியுடன் நித்திரைசெய் 19

யாஹூவெனும் திக்றை யாதில் நிலை நிறுத்தி
பாஹூத்து வாசலிலே வரிசைமகள் நித்திரைசெய் 20

அபூபக்க ருமறுதுமான் அலியார் பொற்பாதமலர்
கபுசில் நிலை நிறுத்திக் கண்ணில்வைத்து நித்திரைசெய் 21

காத்தூனல் ஜென்னத் தெனும் பாத்திமா நாச்சியர்தம்
கோத்திரர் ஹசன் குசைனின் குணமாக நித்திரைசெய் 22

காதிறு முகிய்யித் தினைக் காரணக் கண்மணியை
ஓதிமனக் கண் திறந்து ஓர்மையுட னித்திரைசெய் 23

செய் கெங்க ளுஸ்தாதுனு சேகு அலி நாயகத்தைக்
கைப் பொருளாக வெண்ணிக் கண்மணியே நித்திரைசெய் 24

இன்னிசை முற்றிற்று.

---

இராகம்—கேதாரகௌளம்—தாளம்—ரூபகம்.

பல்லவி.

தீன் தீன் முகம்மது தீனையறியாமல்
தீனிலிருக்கிறே னென்கிறாய் நபி

அநுபல்லவி.

மானின்பிணைநபி மார்க்க மறியாமல்
மங்கையாசையில் முங்கி ஹறும் செய்து
தேனின்பம்போலே தெவிட்டாப் பெரும்பாவம்
தீங்குடன் சூது பெருமை குபாடமும்
தீனின் தலாக்கதைச் சொல்லிப்பிரிந்தபின்
துன்யாவைப் பேசி விவாகத்தைச் செய்திடும்

மேனியை நல்ல மினுமினுப்பாக்கியே
மேலெண்ணம் வைத்து நீ காலத்தை வீணாக்கி தீன்

சரணங்கள்.

1 வட்டிப்பணமது குட்டியைப் போடுது
வட்டி எடுத்தவன் வயிறுபெருக் குது
கட்டிப் பொன் தங்கமும் பெட்டியில் கூடுது
காலனின் தூதுகை யோலைவரு குது
எட்டு நாலங்குலம் எட்டாமற் பாயுது
எட்டியகாலனுங் கிட்டவிருக் குது
சட்டியிலொட்டுங் கறியாயிருக் குது
சதிமுட்டாய்வந்தவர் றாகைப்பிடிக் குது தீன்

2 ஆசைபணத்தில்வைத் தனியாயம் செய்கிறாய்
அழுகள்ளன் தொழுகள்ளன் ஆசாரக் கள்ளனாய்
வேசைகளோடே விரும்பிநடக் கிறாய்
வேதாம்பர் மார்க்கத்தில் மூர்க்கத்தைக் காட்டுகிறாய்
நேசத்தைப்பாராமல் ரோசத்தைப் போக்கிறாய்
கையாண்டிபண்ணிப்பின் பொய்யாகப் பேசுகிறாய்
மோகத்துறைதன்னில் தோணியைத் தள்ளுறாய்
மோகச்சுழிக்குள்ளே தேகத்தைத் தாக்கிறாய் தீன்

3 வயினுல்விகுல்லியெனும் சூறத்தானதில்
வயிலென்னுமோடை புறம்பேசும் பேர்க்கென்று
கைசேதப்பட்டுக் கடைசியில் சாகின்ற
கழுதைகளுக்கொரு போதும்தேறாது
பொய்துனியாவோடு பொட்டையிபுலீசின்
புத்தியோடொத்து நடக்கின்றசண்டாளர்
உடலுமுயிரும் கபிறில்படும்பாட்டை
உற்றுஉணர்ந்திடில் செத்து இறந்திடும். தீன்

4 ஊராரடங்க லுனக்குப்பணிந் தென்ன
உத்தியோகத்தினால் மெத்தப்பயந் தென்ன
தீராத்திரவிய மள்ளிக்குவித் தென்ன
திக்கெங்கும்வம்மிசச்சங்கையிருந் தென்ன
வீரத்தில்சிங்கத்தைப் போலான தாலென்ன
பெலத்தினால்வேங்கைப் புலிபோலிருந் தென்ன
சூறாயசிறா பீலூதும்சக்றாத்தில்
சொல்லும்வகைகள்கை கூடாது கூடாது தீன்

5 மெய்யோடு பொய்யும் கலந்துற வாடுது
மௌத்தெனும் வேங்கை பதிங்கிப்பிடிக் குது
கையிருப்பானது பொய்யாகிப் போகுது
கச்சையில்மிச்சம் கபனுயிருக் குது
பையில்பணமில்லாப் பதறித்திரி யுது
பயணம்புறப்படும் கவனம்வரு குது
செய்யிதுமுஹம்மது பையல்வினைதீர்த்து
சொந்தக்கிருபையைத் தந்தருள்செய்குவாய் நீன்

முற்றிற்று.

---

## ஞானச்சிந்து.

லாஇலாக இல்லல்லாவில் காயிலாக் கனிகளுண்டும்
லாம்அலிபை நோட்டமிடக் காணுமே அந்தக்
காம விந்தின் காரணம் உலாவுமே சொல்லக்
காரணக்குரு சாரமாகிய யீரெழுத்தது ஓரெழுத்தாம்
கருவெழுத்தை உருவெடுத்துத் தேறவும் நல்ல
திருமதீனப் பொற்பதியில் சேரவும் 1

ஆறுநாலெழுத்துவீட்டில் கூறுசொல்ல ஒரெழுத்தின்
ஆருகாணும் என்னிடத்தில் வாருமே கொஞ்சம்
பாரதென்று தயவு செய்து கூறுமே என்னில்
ஆடுகுஸ்திரம் பாடுசாய்வதும் சாடியோடியே கூடடைவதும்
ஆசிகாகும் சொன்னபேர்கள் மாற்றமே விட்டால்
பாசிகாகுமென்றுவேதம் சாற்றுமே 2

வாசியெனும்வாகனத்தில் கூசிடாச்சவாரி செய்தால்
வாசமானநாசிநீளம் ஓடலாம் கோட்டை
வாசலுள்தவாபு செய்து மீளலாம் அங்கே
ஆவிதாவிடு மேவியேவியே கூவிடும்குயில்வாவிசம்சமும்
அஞ்சுநிறமான வொரு மேடது இன்னும்
பஞ்சபூதமஞ்சு பேரின் வீடது 3

ஹூம் எனும்கலியுமாவை தம்மதில் தொடுத்துவந்தால்
உண்மையைக்கலந்து உறவாடலாம் நானே
எம்மிறை திரு லிகாவைச்சேரலாம் என்றும்
காமிலன் குருநாவினல்மொழி நேமமாய்க்கலிமாவிலேதெளி
காயசித்தி மேனியும் துலங்கிடும் இன்னும்
மாயன்இபுலீஸ்வினைபோய்விடும் 4

அஞ்செழுத்தில் பிஞ்செழுத்தை நெஞ்சிலுருவாயிருந்தால்
அஞ்சணம்வெளிக்கும்அப்போ காணுமே ஞானக்
கண்திறந்துபார்க்கப்பார்க்கத் தோணுமே சகல
ஆசைபாசையும் மோசமென்றறி மாசகன்றிடவீசுமேயொழி
ஆதமென்றும் பாதமென்றதாமது அறிய
வேதமென்றும் கீதமென்றதாமிது 5
சந்திர சூரியன்வந்து அந்தரத்திலொன்றுபட
சந்தகமதற்றவொரு காரணம் குரு
தந்தஉபதேசமதின்பூரணம் அது
ஹாவதென்றும் ஹூவதென்றும் ஹீயதென்றும் ஹூம்மதென்றும்
அற்பருக்குச்சாற்றொணாத காரியம் இதை
நட்புவைத்தபேரில்சொன்னால் வீரியம் 6
கன்னிகொலுமேடையிலே உன்னிராகம்பாடுதுபார்
கிண்ணரம்சித்தாருவீணை தாளமும் குயில்
அன்னம்போல் வலம்புரிக்குளோசையும் அந்தக்
கன்னியானவள் சென்னியில்திரு மின்னுபோலொருவன்னமானவள்
கையில்குறுஆனுமேந்தி யோதுவாள் இந்த
வையகத்தில் முத்தரோடிணங்குவாள் 7
என்னவிதமென்றுசொல்வேன் சின்னதோர்முழக்கமென்னுள்
எண்ணம் யாஹூபாதையில் முழங்கிடும் அது
சன்னபின்னலாகவே கிளம்பிடும் தொனி
முண்டகக்கொலுமண்டபத்தினுள் அண்டமாகிய கண்டமீதினில்
முத்துமஹூமூதுவள்ளல்ஆசனம். பரி
சுத்த ஹூபுறாகதங்கேவாகனம் 8
இல்லதென்றரெண்டெழுத்தைக் கொல்லனின்குவையில்வைத்து
இல்லதென்று மெள்ளமெள்ள ஊதவும் மூல
வல்லபக்குகையதை யெழுப்பவும் அந்தச்
சமையமானதில் அமையலாகிடு பயமதாகவே ஜெயமதாகிடும்
சக்கதன்றித்துக்கமும்பறந்திடும் மேலும்
முக்கமல வாயலுந்திறந்திடும் 9
கண்டவர்கள் விண்டறியாக்கற்றவர்கள் பெற்றறியாக்
கண்டகாட்சி யென்னதென்று கேட்டிடில் மனக்
கண்திறந்துபாரதென்று சொல்லுவாய் இந்த
ஆலமானது தூலமானதில்மூலமாகிய கோலமாமொழி
உண்மையானமூன்றெழுத்தின்தந்திரம் அது
அம்மையப்பனுமுரைத்த மந்திரம் 10
அங்கமதிற் பங்கமில்லை சங்கையான பாதையிது
அங்குமிங்கு மெங்குமது தங்கமாம் பொங்கும்
குங்குமம் கஸ்தூரிஅம்பர் வீசுமாம் முஹிய்யி
தீனுடவழியாதிலேதெளி மீமிலேசுழிஹூவிலேயொழி

நீனுடையதீபமது வெங்குமே வீசும்
சீனுடைய சிற்றிலுள்ள தாகுமே 11
பாரமலைபோலப்பாவம் ஓரமாகச்செய்தபாவி
பாருலகிலென்னைப்போலேஇல்லையே வெகு
தூரமானபாவமதுதொல்லையே எனைச்
சேர்த்திடும் துயர்தீர்த்திடும்பிழை காத்திடுந்-தீன்தீன்முஹமது
செய்யிதுமுகம்மதென்ற பாவியை இந்தப்
பையலின்பிழைபொறுப்பாய் யாஹூ ஹை லாயிலா 12

முற்றிற்று.

---

(பூண்டமட்டின்பம்) என்ற மெட்டு.

இராகம் சஹானு-தாளம் ரூபகம்.

பல்லவி.

மூன்றெழுத்தன்புடனே இன்பமுடன்நம்பிடுவாய்
ஈன்றமாதாவும் பிதாவுரையுமந்திரமாம் (மூன்)

அநுபல்லவி.

தோன்றுங்கருப்பொருள் தூண்டாமணிச்சுடர்
தெரிசித்திடு திருமத்தியில் அருமைத்திருநயனத்திடை (மூன்)

சரணம்.

1 ஆலம்அமைக்குமுன் அவ்வொளியை இருளறையில்
ஆண்டவன் தன்னொளிவு முன்னிலையில் கண்மணிபோல்
தோகைமயில்வடிவாகஎனை தில்
தூலக்கரு கோலக்குரு மூலத்திரு மேலோனருள் (மூன்)

2 சூஸ்திரப்பாவையினுள் சூட்சமதாய்நின்றவரே
சொர்க்கத்துத்தூண்டாமணி விளக்கானவரே
கத்தன்களறத்தில் மூத்தொளிவானோரே
கண்மணியே என்மணியே முன்மணியே நன்நபியே (மூன்)

3 சூறத்து வந்நஜ்மில் இறைவனின் திருமதுஹை
சூழும்முகம்மது நன்நபிமீதனுதினமும்
வீசுஞ்சுடர்ப்பிர காசமதெங்கினும்
ஈமான்தரும் தேமாங்கனி சீமான்நபி கோமானருள் (மூன்)

4 ஆடும்சாத்தில்ஹே வாவின்திருநட்பமது
ஆயிரத்தெண்மலரு முச்சுடரிலங்குதுபார்
ஆவியடங்குமுன் மேவிக்கொள் என்மனமே
ஆதம்முயிர்வேதப்பொருள் பாதம்மஹ் மூதேயருள் (மூன்)

5 ஹாஷிம்கிளையில் வந்தஅப்துல்லா புத்திரரே
ஆமினுவீன்ற அருள்மணியே பாலகரே
சேருமிகாவினில் தாருங்காமிந்தச்
செய்யிதுமுஹம்மதெனும் பையல்பிழை தீர்த்திடுவீர் (மூன்)

மகுஷமெக்குமாலை முற்றிற்று.